பக்கங்கள்: 16 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 13 வியாழக்கிழமை 26.04.2018 கதிர் 171

## ஐ.தே.க செயலாளராக அகிலவிராஜ் நியமனம்



கொழும்பு, ஏப்.26
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க வே தொடர்ந்தும் நீடிப்பார். பொதுச் செயலாளராக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் நியமிக்கப்பட்டி

பக்கம் 03

# 2020 இற்குள் தமிழருக்கு நல்ல தீர்வு!

## யாழ்ப்பாணத்தில் அமைச்சர் பௌசி



(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஏப்ரல் 26
"தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நல்லாட்சி அரசு 2020 ஆம் ஆண்டுக்குள் நல்ல தீர்வை முன்வைக்கும். இதற்கான ஆலோசனைகளை அரசு முன்னெடுத்து வருகின்றது."
- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி.

பக்கம் 14

## கேப்பாபிலவு தேக்குக் காட்டில் நேற்றும் திடீர் தீ!



முல்லைத்தீவு, ஏப்.26
கேப்பாபிலவு படை முகாமுக்கு அண்மையில் உள்ள தேக்குக் காட்டில் நேற்று மதியமும் திடீர்த் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. நேற்று இரண்டாவதுதடவையாக இந்தத் தீ பரவியுள்ளது.
கடும் வெயில் காரணமாக இந்தத் தீவிபத்து ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.
இதனால் தேக்கமரங்களின் கீழ் உள்ள காய்ந்த இலைகள் மற்றும் பற்றைகள் எரிந்து சாம்பலாகியுள்ளன. அருகில் உள்ள படைமுகா

பக்கம் 14

## கூலிக்கு ஆள்களை அமர்த்தி முஸ்லிம்கள் மீது வன்முறை

### பிரிட்டன் தூதுவரிடம் ரிஷாத் முறையீடு



கொழும்பு, ஏப்.26
கண்டி மற்றும் அம்பாறை மாவட்டங்களில் அண்மைக் காலத்தில் முஸ்லிம்கள் மீது இடம்பெற்ற வன்முறைகள், மிகவும் திட்டமிட்டு,

பக்கம் 14

## மூன்று ஆள்கொணர்வு மனுக்கள் முல்லை நீதிமன்றால் நிராகரிப்பு

### சாட்சியங்களில் முரண்பாடு என்பதால்

வவுனியா, ஏப்.26
இறுதிப் போரின்போது இராணுவத்திடம் சரணடைந்த பின்னர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மூன்று ஆள்கொணர்வு மனுக்களை முல்லைத்தீவு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.
அந்த வழக்குகளின் விசாரணை அறிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக வழக்குகள் மே மாதம் 22ஆம் திகதிக்கு

பக்கம் 14

## ஸ்ரீதர் தியேட்டரை ஒப்படைக்கக் கோரி டக்ளஸுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், ஏப்.26
நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ்தேவானந்தாவிடம் இருந்து ஸ்ரீதர் தியேட்டரை மீட்டுத் தருமாறுகோரி ஆறு மனுதாரர்கள் சார்பில் நேற்று முன்தினம் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
பிரிட்டனில் வசிக்கும் செல்லையா இரத்தின சபாபதி கைம்பெண் மகேஸ்வரி இரத்தினசபாபதி என்ற வயோதிப மாது சார்பிலும் மற்றும் ஆஸ்திரேலியாவிலும் பிரிட்டனிலும் வசிக்கும் அவரது ஐந்து பிள்ளை

பக்கம் 03

## சு.க. எம்.பிக்கள் எவருமே மஹிந்தவுடன் இணையார்

### சமரசிங்க திட்டவட்டம்

கொழும்பு, ஏப்.26
சுதந்திரக் கட்சியின் 39 நாடாளுமன்றஉறுப்பினர்களில் எவரும் மஹிந்த ஆதரவுக் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்து கொள்ள மாட்டார்கள் என அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பக்கம் 03

## விமானசேவை மோசடி: 2 வாரத்தில் விசாரணை

கொழும்பு, ஏப்.26
ஸ்ரீலங்கன் விமான சேவை மோசடிகள் தொடர்பான விசாரணைகள் அடுத்த இரண்டு வாரத்தில் ஆரம்பிக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
இலங்கை விமான சேவை நிறுவனத்துடன் இணைந்த தொழிற்சங்க சம்மேளனத்துடன் நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற

பக்கம் 14

## படகில் சென்ற 8 பேரை திருப்பியனுப்பிய ஆஸி

கொழும்பு, ஏப்.26
கடல் மார்க்கமாகப் படகில் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றிருந்த 8 பேர் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பட்டனர்.
நேற்றுக் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த 8 பேரையும், அவ்விடத்தில் வைத்துக் குற்றப் புலனாய்வுத் பிரிவினர் கைது செய்தனர்.
சந்தேகநபர்கள், மினு

பக்கம் 14

## வவுனியா வளாகம் மீது புலனாய்வுப் பிரிவு கண்

வவுனியா, ஏப்26
யாழ். பல்கலைக்கழகத்தின்வவுனியாவளாகத்தில் ஏற்பட்ட முறுகல் நிலையைத் தொடர்ந்து, வளாகத்தைப் புலனாய்வுப் பிரிவினர் கண்காணித்து வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.
அத்துடன் இந்தச் சம்பவத்தின் பின்னணியில் வெளிச்சக்திகளின் ஆதிக்கம் காணப்படுவதாகவும்

பக்கம் 14

## லால்காந்தவின் வீட்டில் மஹிந்த ரகசியப் பேச்சு

கொழும்பு, ஏப்.26
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முற்பகல், அனுராதபுரம் மாத்தளைச் சந்தியில் அமைந்துள்ள ஜே.வி.பியின் அரசியல் சபை உறுப்பினர் கே.டி.லால் காந்தவின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.
அங்கு அவர் இரகசியப் பேச்சு நடத்தினார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
காலஞ்சென்றுள்ள

பக்கம் 14

## இது ரகசியம் அல்ல!

ஸ்ரீதர் தியேட்டரிலிலிருந்து ஈ.பி.டி.பியினரை வெளியேற்றும் சட்ட நடவடிக்கை திடீரென கூட்டமைப்பு சார்ந்த சட்டத்தரணி குழாமினால் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.
இருபத்தியொரு வருடங்களாக கைவிட்டிருந்த இந்தக் கட்டடத்தின் மீது இப்போது திடீரென மனுதாரர்க

பக்கம் 03

## வெடிபொருள்கள் திருடியவர் கைது!

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஏப்.26
அண்மையில் படையினரால் விடுவிக்கப்பட்ட வலி. வடக்குப் பகுதியில் காணப்பட்ட வெடிபொருள்களைச் சேகரித்துச் செல்ல முற்பட்ட ஒருவர் காங்கேசன்துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
வலி. வடக்கு வள்ளு

பக்கம் 03

## வடமாகாண அமைச்சர்கள் மீது விரைவில் மோசடி விசாரணை

### பிரதம செயலருக்கு ஆளுநர் உத்தரவு

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஏப்.26
வடக்கு மாகாண அமைச்சரவை மீது முன்வைக்கப்பட்டுள்ள மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து உண்மை நிலை அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு மாகாணப் பிரதம செயலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என என மாகாண ஆளுநர் றெஜினோல்ட்குரே தெரிவித்தார்.
வடக்கு மாகாண அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர்கள் மீது அண்மையில் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன.
அத்துடன் இந்தக் குற்

பக்கம் 14



காலைக்கதிர் Kalaikkathir



# பெரிய பரந்தனில் அமைப்பதற்குத் திட்டமிடும் மதுபானசாலைக்கு மக்கள் மீண்டும் எதிர்ப்பு!

முல்லைத்தீவு, ஏப். 26

கிளிநொச்சி பெரிய பரந்தன் பிரதேசத்தில் புதிய மதுபானச்சாலை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்துப் பிரதேச மக்கள் மீண்டும் கரைச்சிப் பிரதேச செயலாளருக்கு மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

நேற்றுக் கரைச்சிப் பிரதேச செயலகத்துக்குச் சென்ற பிரதேச மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் கரைச்சிப் பிரதேசசெயலாளர் த. முகுந்தனிடம் இந்த மகஜரை கையளித்துள்ளனர்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட கரைச்சிப் பிரதேச செயலாளர் த. முகுந்தன் இந்த விடயம் எதிர் வரும் மாவட்ட ஒருக்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டு முடிவுகள் எட்டப்படும் எனத் தெரிவித்துள்ளார் .

பத்துக்கு மேற்பட்ட பொது அமைப்புக்கள் கையொப்பம் இட்டு மீண்டும் இந்த மகஜர் கையளிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

புதியமதுபானச்சாலைஅமையவுள்ள இடத்திற்கு அருகில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி, மற்றும் விஞ்ஞானக் கல்வி நிலையம் உள்ளிட்ட கல்வி நிலையங்கள் காணப்படுவதாக பலமுறை மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





அத்துடன், பெரிய பரந்தன் கிராமத்தில் 500 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் காணப்படுகின்றன. அவற்றில் பெரும்பாலான குடும்பங்கள் வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழும் குடும்பங்கள்.

எனவே, தமது பிரதேசத்தில் புதிய மதுபானச்சாலை அமைவதானது பெரும் பொருளாதார மற்றும் கலாசாரப் பாதிப்புக்களையும் ஏற்படுத்தும் என்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் பனை, தென்னை வளத் தொழிலாளர்களாக உள்ளனர். இதனால், புதிய மதுபானச்சாலை அமையும் போது இவர்களின் குடும்பத்தின் வாழ்வாதாரத்தையும் பாதிக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, இந்தமதுபானச்சாலை விடயத்தில் பிரதேச மக்களின் ஒட்டுமொத்த உணர்வுகளையும் கருத்தில் கொண்டு அதற்கான அனுமதியை வழங்காது இருக்க வேண்டும் என மக்கள் சார்பாக பிரதேச மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் தொடர்ந்தும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-70)

## மன்னார் வளைகுடாக் கடலில் மிதந்து வந்த பீடி இலை!

மன்னார், ஏப். 26

மன்னார் வளைகுடாக் கடல் வழியாக இலங்கைக்குக் கடத்திச் சென்ற சுமார் 50 லட்சம் ரூபா மதிப்பிலான உயர் ரக பீடி இலைகள் மூட்டை மூட்டையாகக் கடலில் கரை ஒதுங்கியுள்ளன எனச் சுங்கத்துரையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பீடி இலை மூட்டைகளை நேற்றுக் காலை சுங்கத் துறையினர் மீட்டுள்ளனர்.

மன்னார் வளைகுடாக் கடல் பகுதியான பாம்பன் குந்துகால் கடல்பகுதியல் நேற்று அதிகாலை மூட்டை மூட்டைகளாக நடுக்கடலிலும் கடற்கரை ஓரத்திலும் பெறுமதியான உயர் தரம் வாய்ந்த பீடி இலை மூட்டைகள் கரை ஒதுங்கியுள்ளன எனச் சுங்கத்துறை அதிகாரிகளுக்கு அப்பகுதி மீனவர்கள் தகவல் வழங்கியுள்ளனர்.



இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற சுங்கத் துறையினர் மீனவர்கள் உதவியுடன் கரை ஒதுங்கிய பெறுமதி வாய்ந்த சுமார் 25 மூட்டை உயர்ரக பீடி இலைகளை மீட்டுள்ளனர். நடுக்கடலில் மிதந்து வரும் மூட்டைகளைப் பொலிஸார் மீனவர்களின்உதவியுடன்மீட்டுள்ளனர்எனக் கூறப்படுகின்றது.

மீட்கப்பட்ட பீடி இலை மூட்டைகள் உயர் ரகத்தைச் சேர்ந்தவை எனவும் இதன் மதிப்பு சுமார் 50லட்சம் ரூபா எனவும் தெரிய வந்துள்ளது.இதேவேளை, இலங்கைக்கு கடத்திச் செல்லும் போது நடுக்கடலில் படகு மூழ்கியதால் மூட்டைகள் தவறி கடலில் விழுந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதுடன், சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

## மேச்சல் தரவை இல்லாததால் அழியும் நிலையில் கால்நடை!

முல்லைத்தீவு, ஏப். 26

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடைகளை வளர்ப்பதற்கு மேச்சல் தரவை பெரும் பிரச்சினையாகக் காணப்படுகிறது.



மாவட்டத்தில்சுமார்15 ஆயிரம்கால்நடைகளுக்கு மேல் இருக்கின்ற போதும் மேச்சல் தரவை இல்லாதது பெரும் பிரச்சினையாகக் காணப்படுகிறது.

மாவட்டத்தில் ஒரு இடத்தில் கூட இதுவரை மேச்சல் தரவை இல்லை. பல தடவைகள் அதிகாரிகளிடம் கூறியும் இதுவரை எந்த முன்னேற்றமும் இல்லை.

### கால்நடை வளப்போர் ஆதங்கம்

மேச்சல் தரவை இல்லாது போனால் கால்நடைகளுடன் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலை ஏற்படும்.

மேலும், கால்நடைகளை அழிக்க வேண்டிய நிலையும் ஏற்படும் என்று கால்நடை வளப்போர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டக் கால்நடைச் சங்கத் தலைவர் ஈஸ்வரன் இது தொடர்பில் தெரிவித்தவை வருமாறு:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மேச்சல் தரவை இல்லாத நிலை காணப்படுகின்றது .இதனால், கால்நடை வளர்ப்போர்கள் ஆகிய நாங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம். புதுக்குடியிருப்பிற்கு அருகில் உள்ள எழுவாய் என்ற இடத்தில் மேச்சல் தரவை அமைத்து தருகிறோம் எனக் கூறினார்கள்.

ஆனால், இதுவரை அது செய்து தரப்படவில்லை எங்கள் நிலைமையில் மாடுகளை மேய்ப்பதற்கு மேச்சல் தரவை ஒன்று கட்டாயத் தேவையாக உள்ளது.புதுக் குடியிருப்புப் பிரதேசத்தில் 50 பேர் செந்தமான கால்நடை பண்ணையாளர்கள் காணப்படுகின்றார்கள்.

ஆனால், அவர்களுக்கு மேச்சல் தரவை இல்லாதநிலை எங்களுக்கு வயல்செய்கை பண்ணப்படும் காலங்களில் வயலும் செய்யவேண்டும் .

மேச்சல் தரவை தருவதாகச் சொன்னார்கள். ஆனால், இதுவரை அவை அடையாளப் படுத்தப்படவில்லை. இந்த நிலையில் மாடுகளைக் கொண்டு நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்யவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். அடுத்த கட்டம் அதனை மேற்கொள்வோம். எங்களுக்கான மேச்சல் தரவையை விரைவில் அடையாளப்படுத்தி இடத்தை காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-81)

## முல்லை. சிறாட்டிகுளம் பகுதியில் அழிக்கப்படும் காடுகள்!

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு சிறாட்டிகுளம் பகுதியில் இடம் பெற்று வரும் சட்டவிரோதக் காடழிப்புக்களை தடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிறாட்டிகுளம் கிராம அபிவிருத்திச் சங்கம் கோரியுள்ளது

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு சிறாட்டிகுளம் மற்றும் அதனை அண்டியபகுதிகளில்பெருமளவான காடுகள் அழிக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த காட்டு மரங்கள் வெட்டப் பட்டு வெளியிடங்களுக்கு கொண்டு செல் லப்படுகின்றன.

இது சில அதிகாரிகளின் துணையுடன் முன்னெடுக்கப் படுகின்றன.

இதனால், தற்போது கடும் வறட்சி நிலவி வருகின்ற அதே நேரம் விவசாயக் கிராமமாக காணப்பட்ட சிறாட்டிக்குளம் இன்று பாலைவனம் போல் மாறி வருகின்றது.



எமது கிராமத்தை அண்மித்த காட்டுப்பகுதிகளில் தினமும் பெறுமதியான மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன.

இவ்வாறான காடுகள் அழிக்கப்படுவதை உடனடியாகத்தடுத்து நிறுத்த உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களுக்கு ஈடுபாடு பிறந்ததேன், இதில் ஏதும் அரசியல் கலந்திருக்குமோ என்று துளாவும் யோசனை எனது மூக்கில் வியர்த்தது.

*"உள்ளூராட்சித் தேர்தலில் தாம் வெற்றியீட்டிய சபைகளில் ஆட்சியமைப்பதற்கு ஈ.பி.டி.பியின் ஆதரவைப் பெற்று, அவர்களுடன் கூட்டுச் சேர்ந்து விட்டது கூட்டமைப்பு என்ற பெயர் அதற்கு வந்து விட்டது. அதை இல்லை என்று காட்டுவதற்கு இப்படி வழக்குப் போட்டு நடிக்கின்றார்கள் கூட்டமைப்புச் சட்டத்தரணிகளான பிரகிருதிகள்."* – என்று எமது அலுவலகச் செய்திப் பிரிவு பொறுப்பாசிரியர் ஒரு காரணம் சொன்னார்.

எனக்கு என்னவோ அந்தக் கருத்தில் உடன்பாடிருக்கவில்லை. என் செய்தி மூக்கு வியர்த்தது. தேடித் துளாவிப் பார்த்தேன். விடயம் விளங்கியது. வழக்கைத் தாக்கல் செய்த சட்டத்தரணி சயந்தன் கடைசி நேரத்தில் அவசர அவசரமாக இதனை முன்னெடுத்தார் என்று ஒரு பட்சி தகவல் சொல்லியது. அப்படி என்ன கால அவகாசம், கடைசி நேரம் என்று துளாவினேன். விவரம் விளங்கியது.

ஒருவர் ஒரு சொத்தை நீண்டகாலமாகத்தமது உடைமையில் வைத்திருந்தால் அதன் மீது சட்ட உரிமை கொண்டாடும் ஒரு சட்ட முறைமை – வழமை அல்லது வழக்காறு – நமது மத்தியில் இருப்பது தெரிந்ததே.

இலங்கையில் யுத்தம் சுமார் மூன்று தசாப்த காலம் நீடித்தமையால் பலர் தமது அசையாச் சொத்துக்களைக் கைவிட்டு வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடினர். அப்படி அவர்கள் வெளிநாடுகளில் நீண்டகாலம் இருக்கும் போது இங்கு – இலங்கையில் – அவர்களின் சொத்துக்களை உடைமையில் வைத்திருந்தோர், யுத்தம் முடிவடைந்த பின்னர், அந்தச் சொத்துத் தொடர்பான பிணக்கு நீதிமன்றத்துக்கு வரும்போது, நீண்டகாலம் அச்சொத்து தங்களின் உடைமையில் இருப்பதால் அது தங்களுக்குரியது என வாதிடலாம் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

இத்தகைய விடயங்களில், சொத்தின் உரிமையாளர்கள் யுத்தம் காரணமாக வெளிநாட்டில் இருந்திருப்பின் அவர்களுக்கு சரியான சட்டநிவாரணமும், பாதுகாப்பும் வழங்கப்பட வேண்டும் என நல்லாட்சி அரசு முடிவு செய்தது. அதனடிப் படையில் 'பரிந்துரைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்' [Prescription (Special Provisions) Act] என்ற ஒன்று 2016 இல் ஆரம்பத்தில் கொண்டுவரப்பட்டது.

அதாவது, ஒரு சொத்தின் உரிமையைக் கோரும் ஒருவர் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக 1983 மே முதலாம் திகதி முதல் 2009 மே 18 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வெளிநாட்டில் இருந்திருப்பின், இந்தக் கால கட்டத்தில் சம்பந்தப்பட்ட சொத்திற்கு உரிமைகோரும் மற்றொருவர் நீண்டகாலம் அது தனது உடைமையில் இருந்தது என்ற சட்டவாதத்தை நாடமுடியாது என்பதே அந்தச் சட்டத்தின் பிரதான வியாக்கியானம் ஆகும்.

சட்டத்தரணி விஜேதாஸ ராஜபக்ஷ நீதி மற்றும் பௌத்த விவகார அமைச்சராக இருந்தபோது 2016 ஏப்ரல் 26 ஆம் திகதி இந்த 2016 இன் 5 ஆம் இலக்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி இந்தச் சிறப்புரிமைக்காக சட்ட வசதியைப் பெற விரும்புவோர் சரியாக இரண்டு வருட காலத்துக்குள் (அதாவது இன்று – 2018 ஏப்ரல் 26 ஆம் திகதிக்குள்) அதற்கான உரிமையைக் கோர முடியும் என்று அந்தச் சட்டம் தெரிவித்திருந்தது.

அந்த உரிமையையும் இந்த வழக்கில் தமக்குச் சாதகமான சட்ட வலிமையாகப் பயன்படுத்திக் கொள்வதற்காகவே கடைசி நேரத்தில் – நேற்றுமுன்தினம் – இந்த வழக்கை அவசர அவசரமாகச் சம்பந்தப்பட்ட சட்டத்தரணிகள் தாக்கல் செய்தனர் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடிந்தது.

மற்றப்படி, தங்களுக்கும் ஈ.பி.டி.பிக்கும் இடையில் கூட்டுறவோ, இணக்கப்பாடோ, ஒட்டுறவோ இல்லை என்பதைச் காட்டுவதற்கான ஒரு விடயமாகக் கூட்டமைப்புச் சட்ட வட்டாரங்கள் இதனைப் பயன்படுத்தவில்லை என்பதையும் உறுதிப்படுத்த முடிந்தது.

எது, எப்படியென்றாலும் எங்களுடைய ஆள்கள் மொட்டந் தலைக்கும் முழங் காலுக்கும் முடிச்சுப்போட்டுப் பார்த்து இரண்டுக்கும் தொடர்பு இருப்பதாகச் சந்தேகிக்கும் பரவணிப் பழக்கத் தைக்கைவிட இலகுவில் இணங்க மாட்டார்கள்.

இந்தச் சமயத்தில், இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கு எப்படியும் ஒரு புதிய காரணத்தைக் கண்டுபிடித்துக் கொண்டுதான் இருப்பார்கள். அது தவிர்க்க முடியாததே.

–மின்னல்–

## சு.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து வாக்களித்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துகொள்வார்கள்.

மீதமுள்ள 23 பேர் தொடர்ந்தும் அரசில் அங்கம் வகிப்பார்கள். அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைக்க குழு ஒன்று நியமிக்கப்பட்டு, கட்சிக்குள் விரிவான மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும்.

இந்தக் குழு எதிர்வரும் 8ஆம் திகதிக்கும் 15ஆம் திகதிக்கும் இடையில் நியமிக்கப்படும்.– என்றார். (ஐ)

## வெடிபொருள்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வபுரம் பகுதியில் வைத்தே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் அவரிடமிருந்து மிகவும் அபாயகரமான சுமார் பத்து கிலோகிராம் வெடி மருந்தையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

யாழ். குருநகர் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

படையினரின் பயன்பாட்டிலிருந்து இந்தப் பகுதி கடந்த வாரம் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் இந்த வெடிபொருட்கள் படையினரால் தவறுதலாக விட்டுச் செல்லப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு வெடிபொருள்கள் கிடப்பதை அவதானித்த நபர் இரகசியமான முறையில் அவற்றைச்சேகரித்தமையுடன், அவற்றை வேறு பகுதிக்கு எடுத்துச் செல்ல முற்பட்டபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை காங்கேசன் துறைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ–7)

# பல்கலையில் முள்ளிவாய்க்கால் நினைவாலயம் அமைப்பதற்கு கொழும்பிலிருந்து தடையுத்தரவு

யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவாலயம் அமைப்பதற்கு இடைக்கால தடை விதித்து பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு உயர்மட்டத்திலிருந்து அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

வன்னி இறுதிப் போரின் போது உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் உறவுகள் உட்பட்ட முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நினைவு கூருவதற்கு நினைவாலயம் அமைக்க பல்கலைக்கழக மாணவர்கள் திட்டமிட்டனர்.

பல்கலைக்கழக வளாக முன்றிலில் அதனை அமைக்கும் பணிகளை அவர்கள் கடந்த புதன்கிழமை ஆரம்பித்திருந்தனர். எனினும் அந்த இடத்தில் அமைப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகத்தின் பணிப்பால் தடங்கல் ஏற்பட்டது.

இந்த நிலையில் பல்கலைக்கழக நிர்வாகத்தில் உயர்மட்டத்துக்கும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையே கடந்த வியாழக்கிழமை பிற்பகல் பேச்சுக்கள் இடம்பெற்றன.

அதனை பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மாவீரர் நினைவிடத்துக்கு அருகாமையில் அமைக்குமாறும் உயர் மட்டத்தினரால் மாணவர் ஒன்றியத்திடம் கோரப்பட்டது.

பல்கலைக்கழக நிர்வாகத்தின் கோரிக்கையைப் பரிசீலனை செய்த மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் அதற்கு இணக்கம் தெரிவித்தனர்.

இந்தநிலையில் முள்ளிவாய்க்கால் நினைவாலயம் பல்கலைக்கழக வளாகத்தில் நிர்வாகத்தால் அடையாளம் காட்டப்பட்ட இடத்தில் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் நேற்றுப் பிற்பகல் வரை அமைக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் பல்கலைக்கழக வளாகத்துக்குள் அமைக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவாலய பணிகளை தற்போதுள்ள நிலையுடன் இடைநிறுத்துமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி அமைச்சு இணைந்து யாழ்ப்பாண பல்கலைக்கழக நிர்வாகத்தைப் பணித்துள்ளது.

இந்த நிலையில் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட பணிகள் நேற்று மாலையுடன் இடைநிறுத்தப்பட்டன.

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ருக்கின்றார்.

நேற்று ஸ்ரீகோத்தாவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் குழுக்கூட்டத்தின் முடிவில் இந்தத் தீர்மானங்கள் அறிவிக்கப்பட்டன.

கட்சியின் பிரதித் தலைவராக அமைச்சர் சஜித் பிரேமதாஸவும், உதவித் தலைவராகவும் ரவி கருணாநாயக்காவும் பழைய படி நியமிக்கப்பட்டுள்ளனர். தவிசாளராக அமைச்சர் கபீர் காசீமும், தேசிய அமைப்பாளராக அமைச்சர் நவீன் திஸாநாயக்காவும் நியமிக்கப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய பதவி நிலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளோர் விவரம் இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஸ்ரீதர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களின் சார்பிலும் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட் டுள்ளது.

மேற்படி ஆறு மனுதாரர்கள் சார்பிலும் சட்டத்தரணி சயந்தன் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

1996 டிசெம்பர் முதல் கடந்த இருபத்தியொரு வருடங்களாக இந்தக் கட்டடத்தை சட்டவிரோத இருப்பாட்சிக்கு எதிர் மனுதாரர் உட்படுத்தியிருப்பதால் இந்தக் காலத்துக்கு மாதாந்தம் 75 ஆயிரம் ரூபாப்படி வாடகையை சட்டரீதியான வட்டியுடனும், பிற நஷ்ட ஈடுகளுடனும் பெற்றுத் தருமாறும் –

கட்டடத்தை மனுதாரர்களிடம் சட்ட ரீதியாக ஒப்படைக்குமாறு உத்தரவிடும்படியும் –

மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த வழக்குத் தொடர்பில் ஜூன் 6 ஆம் திகதிக்கு முன்னர் எதிர்மனுதாரருக்குத், தகவல் அனுப்ப உத்தரவிடப்பட்டிருப்பதாக அறிய வந்தது.

மனுதாரர் சார்பில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சட்டத்தரணி சயந்தன் மனுவைத் தாக்கல் செய்துள்ள நிலையில், கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் வழக்கில் ஆஜராவார் எனவும் தெரிகின்றது. (உ)

# பேராதனைப் பல்கலையில் தீ

கண்டி – பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நேற்றுப் பிற்பகல் தீ பரவியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பல் மருத்துவப் பிரிவிலேயே இந்தத் தீ பரவியுள்ளது.

மின்சாரக் கசிவால் இந்தத் தீப்பரவல் ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் கண்டி நகர சபையின் தீயணைப்புப் பிரிவால் தீ அணைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# பாதசாரியை மோதியதால் இ.போ.ச. சாரதி மறியலில்

வீதியில் சென்ற பாதாசாரி ஒருவரை மோதிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சாரதியை எதிர்வரும் மே 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கோப்பாய், யாழ்ப்பாணம் – பருத்தித்துறை வீதியில் சென்ற பாதாசாரியை மோதினார் என்ற குற்றச்சாட்டிலேயே இ.போ.ச. பஸ் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.


சாரதியை கோப்பாய் பொலிஸார், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இன்று முற்படுத்தினர்.

விபத்தில் படுகாயமடைந்த முதியவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அத்துடன், சந்தேக நபரான சாரதி இதே குற்றத்துக்கு இதற்கு முன்னரும் நீதிமன்றால் தண்டம் விதிக்கப்பட்டவர்என பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

சாரதி சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி பிணை விண்ணப்பம் செய்தார்.

இருதரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன், சாரதியை எதிர்வரும் மே 3ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஐ)

# கனடா வாகன விபத்தில் இலங்கைப் பெண் சாவு!



ரொரன்றோ, ஏப்.26

கனடாவின் ரொரன்றோ நகரில் பாதசாரிகள் மீது வான் ஒன்று மோதியதில் 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 15 பேர் காயமடைந்தனர்.

இந்த அனர்த்தத்தில் இலங்கையைச் சேர்ந்த பெண்ணொருவரும் உயிரிழந்துள்ளார் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த 48 வயதான ரேனுக அமரசிங்க என்ற பெண் இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் இலங்கையில் ஹொரண பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது. (ஐ)

# மாற்றுத்திறனாளியின் கடை இரவு தீக்கிரை



முல்லைத்தீவு, ஏப்.26

முல்லைத்தீவு, செம்மலைப் பகுதியில் பெண் மாற்றுத்திறனாளி ஒருவர் வைத்து நடத்தி வந்த சிறிய கடை ஒன்று நேற்று முன்தினம் இரவு தீயில் எரிந்து சம்பலாகியுள்ளது.

முல்லைத்தீவு 03 ஆம் குறுக்குத் தெரு, செம்மலைப் பகுதியில் வசிக்கும் நாகேந்திரம் அமராவதி (வயது–60) என்ற மாற்றுத்திறனாளியான வயோதிபப் பெண் தனது வாழ்வாதாரத்துக்காக வீதி ஓரம் நடத்தி வந்த கடையே தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளது.

தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் பொலிஸா விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தேவையா இந்தத் தத்துவ உபதேசம்?

கொழும்பில் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன், இரண்டு விடயங்களை முதன்மைப்படுத்திக் கூறியிருக்கின்றார்.

ஒன்று – நியாயமான தீர்வு ஒன்றை எட்டுவதற்காக எதையும் செய்வதற்குத் கூட்டமைப்பு தயாராக உள்ளது – என்பது.

அடுத்தது – எம்மிடையே காணப்படும் பிளவுகளைக் கைவிட்டு நாம் அனைவரும் ஓரணியில் ஒற்றுமையாகத் திரண்டு தீர்வை அடைவதற்குப் பயணிப்போம். இதற்காக விட்டுக் கொடுப்புடன் செயற்படுவதற்கும் நாம் பின்னிற்கமாட்டோம். – என்பது.

இவை இரண்டுமே சம்பந்தன் முன்மொழிந்த விடயங்களின் சாரம். இரண்டையும் இன்னும் சுருக்கிக் கூறுவதானால் –

ஒன்று – உயர்ந்த பட்ச விட்டுக்கொடுப்பு.

அடுத்தது – ஐக்கியம் முக்கியம்.

தேர்தல்கள் நெருங்கும் சமயங்களில் கூட்டமைப்புத் தலைவர்கள் – குறிப்பாகச் சம்பந்தன் போன்றோர் – உதிர்க்கும் வழமையான வாய்மொழி உபதேசம் இவையாகத்தான் இருக்கும்.

ஆனால், இந்த உபதேசத்தைச் சம்பந்தன் தமிழ் மக்களிடம் கூறுவதை விட, முதலில் தனக்குப் பக்கத்தில் நிற்கும் தனது கட்சியினதும், தனது கூட்டமைப்பினதும் அடுத்த கட்டத் தலைவர்களுக்கு எடுத்துரைப்பதுதான் மிக முக்கியமானது

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் இரண்டு வழித்தடங்களில் முகிழ்ந்திருக்கின்றது. தந்தை செல்வா நெறிப்படுத்திய அஹிம்சை மார்க்கம் – ஒன்று. தலைவர் பிரபாகரன் வழிப்படுத்திய ஆயுத மார்க்கப் போராட்டம் – மற்றையது.

பின்னையதற்கு – பிரபாகரனின் மார்க்கத்திற்கு – முக்கியமானது வீரம். மறத்துடன் வெளிப்படுத்தும் தியாகம். வீரம் என்ற உடனேயே அதனுடன் செருக்கும் கூடவே சேர்ந்து வருகின்றது. வீரத்துடன் பிறக்கும் செருக்கு தவிர்க்க முடியாதது. அந்த வீரத்தை நிலை நிறுத்திப் பேண ஓரளவு வரை செருக்கும் கூடத் தேவைப்படுகின்றது.

வீரத்தின் வழித்தடத்துக்கு விட்டுக்கொடுப்பு முக்கியமானதல்ல. விட்டுக் கொடாமைதான் முக்கியமானது. உறுதிதான் அவசியமானது.

ஆனால், காந்தியும், தந்தை செல்வாவும் போதித்த அறவழி மார்க்கத்திற்கு – அஹிம்சைப் பாதைக்கு – விட்டுக்கொடுப்புத்தான் பிரதானம்.

சம்பந்தன் இப்போது மீண்டும் வலியுறுத்தும் 'ஐக்கிய முக்கியம்' என்ற கடப்பாட்டை நிலை நிறுத்துவதற்கும் கூட இந்த உயர்ந்தபட்ச விட்டுக் கொடுப்புத்தான் முக்கியமானது.

தேர்தலுக்குத் தேர்தல் மக்களிடம் வாக்குகளைச் சுருட்டுவதற்காக 'ஐக்கியம் முக்கியம்' என்று தத்துவ உபதேசம் புரிவதில் அர்த்தமில்லை. அதனை இப்பத்தியில் பல தடவைகள் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டிக் களைத்துப் போய்விட்டோம்.

தனது தமிழ் மக்களிடம் இந்தத் தத்துவ உபதேசத்தை அழக்கழ செய்யும் சம்பந்தன், ஒரு தடவை தனது பக்கம் திரும்பியும் இவ்விடயத்தை நோக்கவேண்டும். தனது நெஞ்சில் கை வைத்து நேர்மைத் திறத்துடன் பேச வேண்டும்.

ஐக்கியத்தைப் பேணுவதற்குத் தானும், தனது கட்சியினதும், கூட்டமைப்பினதும் ஏனைய தலைவர்களும் நேர்மையுடனும் உளத்தூய்மையுடனும் பணியாற்றினார்களா, செயற்பட்டார்களா என்பதை அவர் தன் நெஞ்சைத் தொட்டுப் பார்த்துக் கேட்டுக்கொண்டுதான் பேசவேண்டும்.

பிரபாகரனின் வீரப் போட்டத்தில் வெளிப்பட்ட வீரச் செருக்கையும் விட பல மடங்கு அதிகார, அரசியல் திமிரோடு அவரது தானைத் தளபதிகள் செயற்பட்டமையினால்தான் இன்று கூட்டமைப்புக்கு இந்த நிலைமை என்பது இன்னுமா சம்பந்தனுக்குப் புரியவில்லை?

அஹிம்சைப் போராட்டத்தில் முதலில் தன்னை வருத்தவும், விட்டுக் கொடுக்கவும், மற்றவர்களை அரவணைக்கவும் தயாராக இருக்கவேண்டும்.

இதில் எவ்வளவு தூரம் இறங்கிச் செயற்படுவதற்குச் சம்பந்தனும், அவரது தளபதிகளும் தயாராக இருக்கின்றார்கள் என்பதுதான் கேள்வி.

கூட்டத்துக்குக் கூட்டம் 'ஐக்கியம் முக்கியம்' என்று பேசுவது ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் கொண்டு வந்து விடாது.

ஐக்கியத்தை ஏற்படுத்தும் விதத்தில் மக்கள் மத்தியில் இறங்கி, அனைவரையும் அரவணைத்து, விட்டுக் கொடுத்து, பழகக் கூட்டமைப்புத் தலைவர்கள் தயாராக இருக்கவேண்டும்.

நடந்துமுடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் சம்பந்தன் தலைமை வகித்த கூட்டமைப்புக்குத் தமிழ் மக்கள் 'செம அடி' கொடுத்தார்கள் என்பதே உண்மை. அதற்குக் காரணம் யாது?

கூட்டமைப்புத் தலைவர் என்ற முறையில் தமிழர் தாயகம் எங்கும் உள்ளூராட்சித் தேர்தல் ஏற்பாடுகளைக் கண்காணிக்க வேண்டிய சம்பந்தன், திருகோணமலை மாவட்டத்தின் குக்கிராமங்களில் வட்டாரத்துக்கு வேட்பாளர் தேடிக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் அவரது தானைத் தளபதிகள் யாழ்ப்பாணத்திலும் பிற இடங்களிலும் அரசியல் திமிர்த்தனத்தில், செருக்கேறி, மக்கள் செல்வாக்குள்ளோரை அரவணைக்கத் தவறி, அதிகார ஆணவத்தில் அரசியல் அராஜகம் புரிந்தனர்.

இன்னும் கூட நிலைமை மாறவில்லை.

அஹிம்சை வழியில் பெரும் மக்கள் இயக்கமாகக் கூட்டமைப்பை வழி நடத்துவதாயின், சம்பந்தனின் இந்த உபதேசமும், வழிப்படுத்தலும் முதலில் அவரது அடுத்த மட்டத் தலைவர்களை நோக்கியதாக அமைய வேண்டும். அவர்களை நெறிப்படுத்தி, வழிப்படுத்திய பின்னர், மக்களை ஐக்கியப்படுத்துவது குறித்தும் விட்டுக் கொடுப்புக்குத் தயார்படுத்துவது குறித்தும் சம்பந்தன் சிந்திக்கலாம்.

அப்படிச் செய்யாமல் வெறுமனே தமிழ் மக்களுக்கு அவர் உபதேசம் செய்வது புறக்குடத்தில் ஊற்றும் நீர் போன்றே வீணாகும்.

# திக்கம் வடிசாலையைப் புனரமைத்து தொழிலாளர்களுக்கு உதவவேண்டும்

## அமைச்சர் சுவாமிநாதனிடம் ஈ.பி.டி.பி. கோரிக்கை.



வடமராட்சி திக்கம் வடிசாலையினை நவீன முறையில் மறுசீரமைத்துப் பனைசார் தொழிலாளாகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுமாறு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனிடம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக நிர்வாகச் செயலாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுக் கொழும்பிலுள்ள சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்ற – அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனுக்கும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமாகாணத்தின் மாவட்டங்களின் அமைப்பாளர்கள் உள்ளடங்கிய குழுவினருக்குமிடையேயான – சந்திப்பின்போதே ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் மேற்படி கோரிக்கையை விடுத்தார்.

திக்கம் வடிசாலை தொடர்பாக அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவந்த ரங்கேஸ்வரன் மேலும் தெரிவிக்கையில் –

திக்கம் வடிசாலை கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக இயங்காமல் உள்ளமையால், அந்தத் தொழிற்சாலையை நம்பி வாழும் தொழிலாளர்களின் வாழ்வாதாரங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் பனைசார் உற்பத்தித் தொழிலை நம்பிவாழும் தொழிலாளர்கள்மிகவும் வறுமையின் பிடியில் வாழ்ந்து வருகின்றமையையும் தெளிவுபடுத்தியதுடன் அத் தொழில் சமூகம் சார்ந்த மக்களின் வாழ்வியலைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதனையும் சுட்டிக்காட்டினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் சுவாமிநாதன் , திக்கம் வடிசாலையை நவீன முறையில் புனரமைப்பு செய்வதற்குத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளதாகவும், அத்திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தனியான திட்ட முகாமையாளர் ஒருவரை நியமித்து வெகு விரைவில் அதனை நடைமுறைப்படுத்தத் தனது அமைச்சு தேவையான நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

# பௌத்த சமய வழிபாட்டுடன் உறுப்பினர்களுக்கு வரவேற்பு



வவுனியா நகர சபையில் நேற்று நடந்தது

வவுனியா,ஏப் 25

வவுனியா நகரசபை உறுப்பினர்களின் வரவேற்பு நிகழ்வு பௌத்த சமய வழிபாடுகளுடன் நடைபெற்றது.

வவுனியா நகரசபை மண்டபத்தில் புதிய தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுனியா நகர சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட 21உறுப்பினர்களும் வரவேற்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பௌத்த மத குரு மற்றும் கிறிஸ்தவ மதகுரு ஆகியோர் கலந்து கொண்டனர். நகரசபை எல்லைக்குள் அதிகமாக வசிக்கும் இந்து மக்களைப் பிரதிநித்துவப்படுத்தும் மத குருக்களோ, இஸ்லாமிய மத குருக்களோ கலந்து கொள்ளவில்லை.

இந்நிலையில் பௌத்த மத குருவின் ஆசீர்வாத வழிபாட்டுடன் சபை உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதனால் சபையில் இருந்த பலரும் அதிருப்தி அடைந்தனர்.

வரவேற்பு நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசா, முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-100)

# அரச அலுவலர் தாக்கப்பட்டமையை கண்டித்து நாவற்குழியில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப் 25

நாவற்குழி மேற்கு ஜே.294 கிராம அலுவலர் பிரிவில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமை ஆற்றும் சந்திரன் நகுலகேசன் மீதான தாக்குதலைக் கண்டித்து நேற்றுச் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் ஒரு மணி நேரக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

முற்பகல் 11மணிக்குப்பிரதேச செயலக வாயில் கதவை அடைத்து பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,கிராம அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இனி இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறக்கூடாது எனவும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

விசாரணையைத் துரிதப்படுத்துங்கள்,கடமைக்கு இடையூறு விளைவிக்காதே,எமது உயிருக்கு உத்தரவாதம் தாருங்கள் – போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வண்ணம் அவர்கள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பொதுமகன் ஒருவரால் நாவற்குழிப் பகுதியில் வைத்து இந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் தாக்கப்பட்டுச்சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-21)

# சிறுவர் நாடகத் தொடர் நாளை

யாழ்ப்பாணம், ஏப் 26

செயல்திறன் அரங்க இயக்கமும் யாழ். பொதுசன நூலகமும் இணைந்து நடத்தும் சிறுவர் நாடகத் தொடர் 03 நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் தே.தேவானந்தின் 'பசுவும் புலியும் அரங்கில் சந்தித்தால் என்ன நடக்கும்?' நாடகம் இடம்பெறவுள்ளது.

இலவசமாக இடம்பெறவுள்ள இந்தச் சிறுவர் நாடகத்தில் சிறுவர்கள் மற்றும் ஆர்வலர்கள் கலந்துகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நாளை

27.04.2018
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம் : உத்தரம் பி.ப 2.26 வரை
திதி : துவாதசி மு.ப 8.38 வரை
சுபநேரம் : 5.59 – 7.29 வரை
இராகுகாலம் : 10.29 – 11.59 வரை

# சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாப்பது ஊடகங்கள், மக்களின் பெரிய பொறுப்பு!

கொழும்பு, ஏப். 26

சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாப்பதில் ஊடகங்களுக்கும், பொதுமக்களுக்கும் பெரும் பொறுப்பு உள்ளது எனச் சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டின் சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாப்பதற்காக திட்டமிட்ட குற்றச் செயல்களையும், போதைப் பொருளையும் கட்டுப்படுத்த உச்ச நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.



அவரது அமைச்சில், நேற்று முன்தினம் அமைச்சின் செயலாளர், பொலிஸ் மா அதிபர் ஆகியோருடன் நடத்திய ஊடக வியலாளர் சந்திப்பில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பெரும் ஊழல் மோசடிகள் தொடர்பாக இதுவரை 26 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார கூறுகிறார்

ரஷ்யாவின் முன்னாள் தூதுவரை இலங்கைக்கு அழைத்துவர அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. சர்வதேச பொலிஸார் ஊடாக இதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மேலும், துறைமுகம், தெற்கு, மேல், கரையோரப் பிரதேசங்கள் ஊடாக நாட்டுக்குள் போதைப்பொருள் கொண்டுவரப்படுகின்றன என இனங்காணப்பட்டுள்ளது. இதனை கட்டுப்படுத்த பொலிஸார் உரிய நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுவோரைக் கைது செய்யவும் விசேட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சர் தெரிவித்துள்ளார்

## மாணவர்கள் தவறான முடிவு; எண்ணிக்கையில் உயர்வு!

கொழும்பு, ஏப். 26

பாடசாலை மாணவ, மாணவியர் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்டுள்ள புள்ளி விவரத் தகவல்களின் அடிப்படையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

ஆண்டுதோறும் பாடசாலை மாணவ மாணவியர் நூறுக்கும் மேற்பட்டவர்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

கடந்த 2017 ஆம் ஆண்டில் 137 பாடசாலை மாணவ மாணவியர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

இவர்களில் 69 பேர் மாணவியர் எனவும், 68 பேர் மாணவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் 64 பேர் 8 வயதுக்கும் 16 வயதுக்கும் உட்பட்டவர்களாவர் என்பதுடன் 17 முதல் 20 வயதுவரையிலான மாணவ மாணவியர் 64 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

கடந்த 2016 ஆம் ஆண்டிலும் 120 பாடசாலை மாணவ மாணவியர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்றும் பதிவாகியுள்ளது.

(க)

## சமூகச் சீர்கேடுகளில் ஈடுபட்ட 11 பேர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஏப். 26

அம்பலங்கொடையில் சமூகச் சீர்கேடுகளில் ஈடுபட்ட 11 பேர் மிட்டியாகொட பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்லங்கொடை - கொடகம நிகழ்வு மண்டபத்தினுள் இடம்பெற்ற பேஸ்புக் நண்பர்கள் விருந்தில் வைத்தே இந்த 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விருந்தில் கஞ்சா, அபின், ஹசீஸ், மற்றும் போதை மாத்திரைகளுடனேயே இந்த 11 பேரும் மிட்டியாகொட பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பலபிட்டிய நீதிவானிடம் பெற்றுக்கொண்ட ஆணைக்கு அமைய திடீர் சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 200 - 250 பேர் அங்கிருந்தனர் எனவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அவர்களிடையே இருந்த 11 பேரிடம் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



இந்த விருந்தில் பங்கேற்க 3000 ரூபாய் செலுத்தி பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பற்றுச் சீட்டு பெற்று கொள்ளாதவர்கள் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை. சுற்றி வளைப்பின்போது அதிகளவு இளம் பெண்களும் இருந்துள்ளனர்.

இதேவேளை இலங்கையின் பல பாகங்களில் இவ்வாறான பேஸ்புக் நண்பர்களின் விருந்துகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறான விருந்துகளில் ஆண்களை விட பெண்களே அதிகம் பங்கேற்று வருகின்றனர் எனப் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர். இது குறித்து பெற்றோர்கள் மிகுந்த அவதானமாகச் செயற்பட வேண்டும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## இலங்கை ரூபாவின் பெறுமதி வரலாறு காணாத வீழ்ச்சியில்!

கொழும்பு, ஏப். 26

இலங்கையில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது என வட மேல் மாகாண பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அமிந்த மெத்சீல குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபாவின் பெறுமதி வரலாறு காணாத வீழ்ச்சியைச் சந்தித்துள்ளதால் இந்த நிலை ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெளிநாடுகளில் இருந்து பெற்றுக்கொண்டுள்ள கடன் டொலருக்கு மாற்றப்பட்டு செலுத்தப்படுவதால், கடந்த காலங்களை விட அதிக தொகையை செலுத்த வேண்டிய சந்தர்ப்பமும் உள்ளது எனக் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சிரிமல் அபேரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.



அத்துடன், இது எரிபொருள் மற்றும் இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் என்பவற்றின் விலை அதிகரிப்பில் நேரடியாகத் தாக்கம் செலுத்தும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மாணவனை துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய ஆசிரியைக்கு எதிராக வழக்குத் தாக்கல்!

கொழும்பு, ஏப்.26

பதுளை, ஹாலிஎல பாடசாலையில் தனது மாணவர்களில் ஒருவரை ஆசிரியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் வழக்கு ஒன்று பதுளை நீதவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்றது எனப் பொலிஸ் நிலையத்தில் மாணவனின் பெற்றோரினால் நவம்பர் மாதம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

50 வயதான ஆசிரியை பாடசாலையில் ஒரு விழா நடந்த காலத்தில் தங்களுடைய 15 வயதான மகனைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்று பெற்றோர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய மேலும் விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்று நீதிவான் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

அதேவேளை, இந்த ஆசிரியை ஒரு லட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று நீதிவான் உத்தரவிட்டார்.

## கடலுக்குள் முழுமையாக மூழ்கும் ஆபாயத்தில் புத்தளம் பகுதியை அண்மித்த கிராமம் ஒன்று!



புத்தளம், ஏப். 26

புத்தளம் பகுதியை அண்மித்த கிராமம் ஒன்று கடலுக்குள் முழுமையாக மூழ்கும் ஆபாயத்தை எட்டியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடல் கொந்தளிப்புக் காரணமாக இந்த ஆபத்து ஏற்பட்டுள்ளது என அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆராச்சிகட்டுவ - கருக்குப்பனை கிராமம் நாளுக்கு நாள் கடலுக்குள் மூழ்கி வருகிறது என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஹமில்டன் ஏரி மற்றும் கடலில் அருகில் உள்ள கருக்குப்பனை கிராமத்தில் வாழும் அனைவரும் மீனவத் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர்.

கருக்குப்பனைக் கிராமத்தின் சில இடங்களில் கடல் அரிப்புக்குள்ளாக ஆரம்பித்துள்ளது. அதற்கு தீர்வாகக் கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம் பெரிய கருங்கற்களைக் கடற்கரையில் பயன்படுத்தியுள்ளனர்.

எனினும், கருங்கற்கள் வைக்கப்பட்டுள்ள இடங்களிலேயே கடல் அரிப்புகள் ஏற்படுகின்றமை பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

கருங்கற்கள் வைக்கப்பட்டுள்ள இடத்தில் பாதுகாப்பிற்காக ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றால் வெகு விரைவில் தமது கிராமம் கடல் நீருக்குள் மூழ்கும் என அந்தப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.


இதுவரை சுமார் 10 - 15 அடி அளவு கடல் அரிப்புக்குள்ளாகியுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது என புத்தளம் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

(க)

காலைக்கதிர் Kalaikkathir



# ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் கஞ்சா பயிர் செய்கை



கொழும்பு, ஏப். 26

கஞ்சாச் செடி பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் புத்தள, வந்தம தெமலிய பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 50 ஆயிரம் கஞ்சா செடிகள் பயிரிடப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

லுனுகம்வெஹர, குடாகம்மானப் பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய நபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை வெள்ளவாய நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தந்தை செல்வாவின் 41 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு இரத்தான நிகழ்வு!



கொழும்பு, ஏப். 26

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபகரும், தலைவருமான தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் 41 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணியின் ஏற்பாட்டில் இன்று மட்டக்களப்பு நல்லையாவீதியில் அமைந்துள்ள கட்சி மாவட்டக் காரியாலயத்தில் இரத்ததான நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணி உபதலைவரும், மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினருமாகிய வி.பூபாளராஜா தலைமையில் மேற்படி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன். இதில் மக்கள் பிரதிநிதிகள், கட்சி உறுப்பினர்கள், இளைஞர் அணி உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த இரத்ததானம் வழங்க அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தினசரி ராசி பலன் (26.04.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் சித்திரை 13 ஆம் நாள் வியாழக்கிழமை ஏகாதசித்திதி. காலை 9.20 மணி வரை பின்னர் துவாதசி. நட்சத்திரம்: பூரம் பகல் 2.26 மணி வரை. பின்னர் உத்தரம். சித்தயோகம் பகல் 2.26 மணி வரை பின்னர். அசுபயோகம்.

**ராகுகாலம்** - பகல் 01.41 மணி வரை 03.14 மணி வரை.
**சுபநேரம்** - காலை 7.28 மணி வரை 8.58 மணி வரை.
**திவசம் செய்ய வேண்டிய திதி** - சித்திரை மாத வளர்பிறை துவாதசி.
**பிறந்த நட்சத்திர வழிபாடு** - பூரம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். உடல் நலம் சீரடையும். தைரியம், தன்னம்பிக்கை, சாதிக்கும் வல்லமை ஆகியவை உடன் வந்து சேரும். தொழில் தொடங்க உள்ளவர்கள் வெற்றி அடைவார்கள்.

**ரிஷபம்** கவலையான நாள். பணவரவு குறையும். எதிலும் தடை தாமதம் ஏற்படும். கொடுத்திருந்த பணம் திரும்பக் கைக்குக் கிடைக்காது. வம்பு, வழக்கு என்று அலைய வேண்டி வரும். குடும்பத்தில் திடீரென குழப்பம் ஏற்படும்.

**மிதுனம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சுமாராக இருக்கும். இதுவரை நன்கு இருந்த குடும்ப நிலை சிக்கலாகி விடும். உறவினர்களுடன் சலசலப்பு ஏற்படும். மன நிம்மதி குறையும்.

**கடகம்** இன்பமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். பெண்கள் விரும்பிய ஆடை ஆபரணங்கள் வாங்கி மகிழ்வார்கள். இதுவரை பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். மனதில் இனிய நினைவுகள் குடிகொள்ளும். சகோதர உறவு வலுவானதாக இருக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த உயர்வுகள் கிடைக்கும்.

**கன்னி** சலனம் மிகுந்த நாள். பெரும் அச்சம், மனக் கஷ்டம் திடீரென ஏற்பட்டு அழுத்தம் பெற்றதாகத் தெரியும். எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. பிள்ளைகளின் முன்னேற்றம் தங்குவதால் கவலை மேலோங்கும்.

**துலாம்** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆன்மிகம், ஞானம் என்பன விருத்தியடையும். எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லும்.

**விருச்சிகம்** மத்திமமான நாள். வருமானம் சுமாராக இருக்கும். செலவுகள் அதிகமாகும். அலைச்சல், கூடுதல் வேலைப்பளு என்பன கிடைக்கும். உடலில் ரோகங்கள் உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

**தனுசு** மேன்மையான நாள். பொருளாதாரம் மன நிறைவைத் தரும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். இவர்களின் மதிப்பு மரியாதை, கௌரவம் உயரும். தாய் வழி உதவிகள் கிடைக்கும். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும்.

**மகரம்** குழப்பமான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் குழப்பம் உண்டாகும். உடல் நலம் குன்றும். எதையும் சரியாக முடிவு எடுக்க முடியாதபடி இருக்கும். உறவினர்கள் தொல்லை தருவார்கள்.

**கும்பம்** விருத்தியான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். இவர்களின் முயற்சித் திறன், ஆளுமைத் திறன் அதிகரிக்கும். உறவினர்களுடன் இருந்த மனஸ்தாபம் நீங்கி நிம்மதி உண்டாகும்.

**மீனம்** கீர்த்தியான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். குடும்பக் கடனை அடைத்து நிம்மதி அடைவார்கள். மாணவர்களின் திறமையால் ஆசிரியர்களின் பாராட்டைப் பெறுவார்கள்.

சந்திராஷ்டம நாள்: உத்தராடம், 2ஆம், 3ஆம், 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

# உடவளவை நீர்த்தேக்க வான் கதவுகள் திறப்பு



கொழும்பு, ஏப். 26

உடவளவை நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

உடவளவை நீர்த்தேக்க பிரதேசத்தில் தற்பொழுது கடும் மழை பெய்துவருகின்றது. இதனைத் தொடர்ந்து நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் வேகமாக உயர்ந்து வருகின்றது.

தற்பொழுது நீர்த்தேக்க அதிகரிப்பு தொடர்பாக மகாவலி அதிகார சபையின் செயற்பாட்டுப் பொறியியலாளர் சுஜீவ குணசேகர தெரிவிக்கையில் -

மேற்படி நீரை வளவ கங்கைக்கு திருப்பவேண்டி ஏற்பட்டது. இதனால், நதியை அண்டியுள்ள பகுதியிலுள்ளோர் அவதானத்துடன் செயற்படுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# ஜனநாயகத்தை விரிவுப்படுத்தவே 20ஆவது திருத்தச் சட்டம்!

## அனுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 26

எந்த அணியின் அதிகார தேவைக்காகவும் மக்கள் விடுதலை முன்னணி 20 ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வரவில்லை. ஜனநாயகத்தை விரிவுப்படுத்த வேண்டும் என்ற தேவைக்கொண்டுக்காகத் தாம் அதனைக் கொண்டுவருவதாகவும் முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடாளுமன்றத்தில் தனி நபர் யோசனையாக இந்த 20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை மக்கள் விடுதலை முன்னணி கொண்டு வரவுள்ளது.

20ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்படுவது குறித்து நாட்டுக்குத் தெளிவுப்படுத்திய பின்னர், மஹிந்த ராஜபக்ஷ தரப்பு மேற்கொண்ட முதல் நகர்வுக்கு நன்றி தெரிவித்துகொள்கின்றோம்.

இதேவேளை, மஹிந்த ராஜபக்ஷ, பிரசன்ன ரணதுங்க மற்றும் பந்துல குணவர்தன ஆகியோரின் கருத்துக்களுக்கும் நன்றி கூறுகின்றேன் என்றும் அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# ரயில் கட்டணம் அதிகரிப்புத் தொடர்பில் போக்குவரத்து அமைச்சிடம் அறிக்கை!



கொழும்பு, ஏப். 26

ரயில் கட்டண அதிகரிப்பு சம்பந்தமான குழுவின் அறிக்கை போக்குவரத்து அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பயணிகள் கட்டணத்தை நூற்றுக்கு 15 வீதத்தால் அதிகரிப்பது தொடர்பான யோசனை அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்றும் ரயில்வ திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பயணிகள் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பான யோசனை மாத்திரம் குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமையுடன், பொருள்கள், பொதிகள் விநியோக சேவைக்கான கட்டணம் அதிகரிப்பு மேற்கொள்வதில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள அந்த அறிக்கை அமைச்சரவைக்குத் தாக்கல் செய்து அனுமதி பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

அமைச்சரவை அனுமதி பெற்ற பின்னர் ரயில் கட்டண அதிகரிப்பு சம்பந்தமாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உரிய தினத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பது மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பு!

கொழும்பு, ஏப். 26

மாகாண சபைத் தேர்தலை உரிய தினத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பது அனைத்து மக்கள் பிரதிநிதிகளினதும் பொறுப்பாகும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு நான்கு மாற்று வழிகள் உள்ளன. இந்த நான்கு வழிகளில் ஒன்றை தெரிவுசெய்து நாடாளுமன்றம் அங்கீகரிக்குமாயின் ஏற்கனவே கலைக்கப்பட்ட மூன்று மாகாண சபைகள் மற்றும் எதிர்வரும் செப்ரெம்பரில் முடியவுள்ள மூன்று மாகாண சபைகள் உள்ளடங்கலாக ஆறு மாகாண சபைகளின் தேர்தல்களையும் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் நடத்த முடியும் என்றும் அவர் கூறினார்.



மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் ஊடகச் செய்திகள் பற்றிய உறுதிப்படுத்தல் அறிக்கையை வெளியிட்டு வைக்கும் நிகழ்வில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வு நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாகாணசபைத் தேர்தல்களை தேர்தல்கள் ஆணைக்குழு இழுத்தடிக்கவில்லை. தேர்தல்கள் உரிய காலத்தில் நடத்தப்பட்டு மக்களின் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஆணைக்குழு உள்ளது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நாடாளுமன்றத்தில் காணப்படும் சட்டச்சிக்கல்களை நீக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் மற்றும் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிராத கட்சிகள் என சகல கட்சிகளுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

கடந்த வருடம் கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாண சபைகளின் ஆயுள் காலங்கள் முடிவடைந்தன. கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் அவற்றுக்கான வேட்பு மனுக்களைக் கோர தயாரான நிலையிலேயே நாடாளுமன்றத்தில் மாகாணசபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

25 வீத பெண்களின் பிரதிநிதித்துவம் குறித்த திருத்தமும் உள்ளடக்கப்பட்டது. சட்டத்திருத்தத்துக்கு அமைய எல்லைநிர்ணயம் மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கைபெப்ரவரிமாதம் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அமைய மாகாண சபைகளின் நிர்வாகத்தை முன்னெடுக்கும் உரிமை மக்கள் பிரதிநிதிகளுக்கே உள்ளது.

தேர்தல் முறையை மாற்றும் அதிகாரம் எதுவும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கிடையாது. நாடாளுமன்றமே தேர்தல் முறை பற்றிய தீர்மானங்களை எடுக்கிறது.

அங்கு முடிவொன்றை எடுத்து இந்தத் தேர்தல் முறையின் கீழ் தேர்தலை நடத்துமாறு அறிவுறுத்தப்பட்டால் தேர்தலை நடத்தத் தயாராக இருக்கிறோம் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்தார்.

## 2020 இல் இலங்கை கண்ணி வெடிகளற்ற நாடாகும்




வடக்கில் கண்ணிவெடி அகற்றல் பணிகளுக்காக கடந்த 2010 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 120 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது என பிரித்தானியா அறிவித்துள்ளது.

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் இலங்கை நிலக் கண்ணி வெடிகளற்ற நாடாக பிரகடனப்படுத்தப்படும் என்பதே சர்வதேசத்தின் எதிர்பார்ப்பாகும் என்று பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

கண்ணிவெடிகள் அற்ற நாடாக இலங்கையை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் சர்வதேச நாடுகள் பலவும் கை கொடுத்துள்ள நிலையில், அதில் பிரித்தானியாவும் பங்கேற்றிருப்பது முக்கிய அம்சமாகும்.

இந்த நிலையில், எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்கான இலக்குவரை பிரித்தானிய அரசு, தொடர்ச்சியாக இலங்கைக்கு உதவிகளை வழங்கும் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## கொட்டகலை வைத்தியசாலையின் தாதியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு!

கொழும்பு, ஏப். 26

நுவரெலியா மாவட்டத்துக்கு உட்பட்ட கொட்டகலை பிரதேச வைத்தியசாலையின் தாதியர்கள் நேற்றையதினம் காலை முதல் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நுவரெலியா பொது சுகாதாரக் காரியாலத்தின் கீழ் ஆறு தாதியர்கள் மாத்திரம் பணிபுரிந்து வருகின்றனர்.

அந்த வகையில் ஐந்து வருடங்கள் பணிபுரிந்து வருகின்ற பெண் தாதியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுவதாக தகவல் கிடைத்தமையினால் இந்த இடமாற்றத்தை வழங்கிய நுவரெலியா மாவட்டத்துக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரிக்கு எதிராக இந்தப் பணிபகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது எனத் தாதியர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தத் தாதியர்களுக்கு இந்த இடமாற்றம் தொடர்பில் நேற்றுக்காலை பணியில் ஈடுபட்டபோதே அறிவிக்கப்பட்டது என்றும், தமது பணிபகிஷ்கரிப்பினால் வைத்தியசாலையில் உள்ள நோயாளர்களுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படாத





வகையில் பணிபகிஷ்கரிப்பை தாங்கள் முன்னெடுப்பார்கள் என்றும் அவர் கள் தெரிவித்துள்ளனர் .

## மனைவியை வெட்டி கொன்ற கணவன்!

கொழும்பு, ஏப். 26

தங்காலைப் பிரதேசத்திலுள்ள தெற்கு குடவெலப் பிரதேசத்தில் கணவர் ஒருவர் தனது மனைவியை வெட்டிக் கொலை செய்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

22 வயதான மனைவியை 26 வயதான கணவர் கழுத்தைக் கத்தியால் வெட்டிக் கொலை செய்துள்ளார்.

தொலைபேசி அழைப்பின் நிமித்தம் தங்காலைப் பொலிஸார் இந்தப் பெண்ணின் வீடுக்குச் சென்றபோது இந்தப் பெண் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தங்காலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)

## எரிபொருள் விலை அதிகரிக்காது!

அர்ஜுன ரணதுங்க கூறுகிறார்

கொழும்பு, ஏப். 26

எரிபொருள் விலையை அதிகரிக்கும் யோசனையில்லை எனப் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க அமைச்சர் அமைச்சரவைக்கு தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின்போது எரிபொருள் விலை அதிகரிப்பது தொடர்பில் அமைச்சர்கள் சிலர் வினவியபோதே அமைச்சர் அர்ஜுன ரணதுங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நஷ்டத்தில் இயங்கினாலும் தற்பொழுது விலையை அதிகரித்து மக்களுக்கு அழுத்தத்தை ஏற்படுத்தும் எண்ணம்



இல்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எரிபொருள்விலை தொடர்பில் விலை சூத்திரம் ஒன்று முன்வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக்கு அவ்வாறான விலை சூத்திரமொன்று முன்வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# வெள்ளை வான் கடத்தல்களின் முக்கிய சூத்திரதாரி கோட்டாவே!

கொழும்பு, ஏப். 25

வெள்ளை வான் கடத்தல்களின் முக்கிய சூத்திரதாரி முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவே.

வெள்ளை வான் கடத்தல்களுக்கான உத்தரவுகளை வழங்கிய கோட்டாவை விசாரணை செய்வதற்கு எவருக்கும் முதுகெலும்பு இல்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-




உத்தரவு இன்றி எதுவும் இடம்பெற்றிருக்க முடியாது. வெள்ளை வான் கடத்தல்களுக்கான உத்தரவை பாதுகாப்பு அமைச்சரோ அல்லது பாதுகாப்பு செயலாளரோ வழங்கியிருக்க வேண்டும்.

2012 வெலிக்கடை சிறைச்சாலை படுகொலைகளுக்காகவும் கோட்டாபய ராஜபக்ஷவை விசாரணை செய்யவேண்டும்.பாதள உலகத்தவர்களுடன் எவருக்காவது தொடர்பிருந்தால் அவர் உடனடியாக கொலை செய்யப்பட்டார். இது குறித்து பொலிஸ் விசாரணைகள் எதுவும் இடம்பெறவில்லை.

பொலிஸார் இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும். படுகொலைகளில் ஈடுபடுவதற்கு எந்த அரசியல் வாதிக்கும் உரிமையில்லை.- எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir






# செர்னோபில் அணு உலையில் நடந்த பயங்கர விபத்து!

அன்றைய ஒருங்கிணைந்த சோவியத்தின், செர்னோபில் பகுதி மக்களுக்கு, அது கடுமையான குளிர் இல்லை. 26 - 04 - 1986. அந்த இரவு ஒரு சனிக்கிழமை. நள்ளிரவு மணி 1. 15. செர்னோபில் அணு உலையின் 4 வது எண் கலனில் வழக்கமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. 1.20 மணி... அதீத வெப்பத்தைக் கக்க ஆரம்பிக்கிறது. தண்ணீர் நொடிகளுக்கும் குறைவான நேரத்தில் ஆவியாகத் தொடங்குகின்றன. மணி... 1.22 நிமிடங்கள், 30 நொடிகள். அதைப் பரிசோதித்துக் கொண்டிருந்த ஆய்வாளர்களுக்கு என்ன செய்வதெனத் தெரியவில்லை. அவர்கள் முடிவெடுத்து முடிப்பதற்குள்... மணி 1.23... பெரும் சத்தத்தோடு உலை வெடிக்கிறது. கடுமையான வெப்பம். அதைப் பரிசோதித்த இருவரும் சம்பவ இடத்திலேயே சாகிறார்கள். தீ பற்றத் தொடங்குகிறது. பற்றி எரியத் தொடங்குகிறது. எந்தளவிற்கு என்றால்... அது தொடர்ந்து 9 நாள்களுக்கு எரிந்து கொண்டிருந்தது.

**வரலாற்று துயரம் - செர்னோபில் அணு உலை விபத்து**

முதலில் இதை சாதாரண விபத்தாகத் தான் நினைக்கிறது சோவியத் அரசு. பின்னர், விபத்தின் வீரியத்தை உணர்ந்து ஹெலிகொப்டரில் பறந்து மண்ணையும், கரியத்தையும் வீசி அணைக்க முயற்சிக்கிறார்கள். சுரங்கத் தொழி



லாளர்கள் , அணு உலையிலிருந்து தரை வழி வெளியேறும் அணுக்கழிவுகளைக் கட்டுப்படுத்த முயற்சிக்கிறார்கள். 10 லட்சம் பேர் வரை இணைந்து முதற்கட்ட மீட்பு முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். 200 தொன் அளவிற்கான கதிர்வீச்சு நிறைந்த அணுக்கழிவு, 30 தொன் அளவிற்கான கதிர்வீச்சு நிரம்பிய துகள்கள், 16 தொன் அளவிற்கான யுரேனியம் மற்றும் புளுட்டேனியம் நிறைந்து கிடந்த அந்தப் பகுதியைப் பாதுகாக்க அதன்மீது ஒரு கொன் கிரீட் வேலியை அமைக்கின்றார்கள். விபத்து நடந்த அன்று மட்டும் 31 பேர் நேரடியாக இதில் மரணமடைந்தார்கள்.

விபத்து நடந்து 36 மணி நேரத்தில், 10 கிமீ சுற்றளவிலிருந்த கிட்டத்தட்ட 49 ஆயிரம் பேர் அந்தப் பகுதிகளிலிருந்து அப்புறப்படுத்தப்படுகின்றனர். மொத்தமாக 8 தொன் அளவிற்கான கதிர்வீச்சு பொருள் வகைகள் வெளியேறின. பல லட்சம் பேருக்கு உடல் நலக் குறைவுகள் ஏற்பட்டன. புற்றுநோய் பாதிப்புகள் மிக அதிகமாக இருந்தன. கதிர்வீச்சு பாதிப்புகளின் காரணமாக தோராயமாக 90 ஆயிரத்திற்கும் அதிகமானோர் மரண



மடைந்துள்ளனர். இதில் 20 வீதத்தினர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். வாழ்வாதாரத்தைக் குலைத்து, மரணத்தை அளித்து, பல லட்சம் பேரை நடை பிணங்களாக்கி, மரம், செடி கொடிகளைக் கொன்று, லட்சக்கணக்கான கால் நடைகளைக் கொன்று என மனித இன வரலாற்றில், மனிதன் ஏற்படுத்திய ஆகப் பெரும் பேரிடராக வலியோடு இது பதிவு செய்யப்பட்டுள்ளது.

**வரலாற்று துயரம் - செர்னோபில் அணு உலை விபத்து**

இன்றைய உக்ரைன் நாட்டின் ப்ரிப்யட் நகர் அருகில் இருக்கும் செர்னோபில் அணு உலைப் பகுதியில் முப்பது ஆண்டுகள் கடந்தும் கூட, இன்றும் அணுக்கழிவுகளைச் சுத்தப்படுத்தும் வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. கதிர்வீச்சின் பாதிப்புகள் நாடுகள் கடந்து அயர்லாந்து வரை இன்றும் இருந்து வருகிறது.

இதில் நாம் ஆச்சரியப்பட வைக்கும் விடயம் என்ன வென்றால், இத்தனை அழிவுகளுக்குப் பிறகும் செர்னோபில் அணு உலை மற்றப்பகுதிகள் 2000 ஆம் ஆண்டுவரைத் தொடர்ந்து இயங்கி வந்துள்ளன.

> 90 ஆயிரம் பேரை சாவு கொண்டு உலகையே உலுக்கிய கொடூரம்



## இன்று உலகத்திலேயே பெரிய அருங்காட்சியகம் செர்னோபில்

இன்று உலகத்திலேயே பெரிய அருங்காட்சியகம் செர்னோபில். வளர்ச்சியின் அழிவை நமக்குக் காட்டும் இடம் செர்னோபில். வாழ்வின் மகத்துவத்தைக் காட்டும் ஊர் செர்னோபில். கடந்த சில ஆண்டுகளாக செர்னோபில் அணு உலை பாதிக்கப்பட்ட பகுதியைப் பார்வையிட மக்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். டொமினிக் ஓர்ஃபானஸ் என்பவர் கடந்த எட்டு ஆண்டுகளாக செர்னோபிலைப் பார்வையிட விரும்புபவர்களுக்காக சுற்றுலா ஏற்பாடு செய்து வருகிறார். அவர் சொல்கிறார்.-

செர்னோபிலை பார்வையிட்ட மக்கள் வாழ்தலின் மகத்துவத்தைப் புரிந்துகொள்ளத் தொடங்கியுள்ளனர். அவர்களுக்கு இந்த வாழ்வு நிலையற்றது என்பதை செர்னோ பில் உணர்த்துகிறது.- என்கிறார்.

30 ஆண்டுகளில் செர்னோபில் நிறைய மாறிவிட்டது. கருகிய மரங்கள் அதன் பச்சையத்தினை மீட்டெடுத்துவிட்டன. மண் வாசனையைக் கூட உணர முடிவதாக, பார்வையிட்ட மக்கள் சொல்கிறார்கள். இயற்கை தன்னை புதுப்பித்துக் கொண்டுவிட்டது. ஆனால், மனிதனின் கண்டுபிடிப்புகளானத் தொடர் வண்டிகள், ஆலைகள் இன்னும் அப்படியே துருப்பிடித்துதான் இருக்கின்றன.

மனிதனின் பேராசை அனைத்தையும் தன் கட்டுக்குள் வைத்திருக்கத் துடிக்கிறது. ஆனால், தொடர்ந்து இயற்கையின் முன் பரிதாபமாக மனிதன் தோற்றுக்கொண்டிருக்கிறான். இயற்கை நமக்கெல்லாம் பேராசான் என்பதற்கு அங்கு படரும் பச்சைய வாசனை யும், துருப்பிடித்துப் பரிதாபமாக இருக்கும் தொடர் வண்டியும்தான் நல்ல உதாரணம்.

மனிதனின் தேவைகள் எல்லையற்றவை. நமக்கு வாகனங்கள், கணினி என எல்லாம் தேவை. அதற்கு மின்சாரம் தேவை, உலகெங்கும் உள்ள அரசாங்கங்கள் மின்சாரத் தேவைக்கு தீர்வாக இன்று முன்வைப்பது அணு உலைகளைத்தான்.

ஒரு பக்கம் அரசாங்கங்களை மாற்று மற்றும் நீடித்த மின்சார உற்பத்தியை நோக்கித் திருப்ப நிர்ப்பந்திக்க வேண்டும். அதே நேரம், நம் மின்சாரப் பயன்பாடுகளையும் குறைத்துக் கொள்ள வேண்டும். இந்த இரண்டு முனைகளையும் சந்திக்க வைப்பதுதான் உன்னத வாழ்விற்கான நிரந்தரத் தீர்வு. வாழ்வு நிலையற்றது என்பதை செர்னோபில் தன் பார்வையாளர்களுக்கு உணர்த்திக்கொண்டே இருக்கிறது, இதை நாம் புரிந்துகொள்ள மறுத்தோமானால், நம் வாழ்வும் செர்னோபில்லில் நிற்கும் அந்தத் துருப்பிடித்த தொடர்வண்டி போல் ஆகிவிடும்.



செர்னோபில் விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஒரு தொண்டுநிறுவனத்தைத்தொடங்கி, உதவிகளை செய்து வருபவர்



ரோஷே என்கிற பெண்மணி. ஐ.நாவிடம் இவர் தொடர்ந்து வைத்த கோரிக்கையின் பயனாக, ஏப்ரல் 26 ஆம் திகதி செர்னோபில் பேரழிவின் நினைவு தினமாக உலகம் முழுக்க அனுசரிக்கப்படுகிறது.

எங்கோ, என்றோ நடந்த அழிவு... அதில் இறந்தவர்களுக்காக நாம் ஏன் நேரத்தை செலவிட வேண்டும் என்ற எண்ணம் எழலாம்... நமக்கான அதிவேக வாழ்வில் இதைச் செய்தியாகக் கூட கடக்க நேரமில்லாமல் ஓடிக் கொண்டிருக்கலாம்.

ஆனால், அந்த வெப்பத்தில் வெந்தவர்களுக்கு, வெந்து இறந்தவர்களுக்கு, கருகி செத்த மரம், செடிகளுக்கு, எந்தத் தீங்கும் செய்திடாமல் இன்றளவும் முடமாகிப் பிறக்கும் சிசுக்களுக்கு... நாம் ஒதுக்கும் சில நொடிகள், அவர்களை நினைந்து நாம் சிந்தும் சில துளி கண்ணீர்தான் நமக்குள் எங்கோ ஒளிந்து கிடக்கும் மனிதத்தின் மிச்சமாக இருக்கக் கூடும். அந்த மனிதத்தின் மிச்சங்களை அவர்களுக்காகக் கொட்டுங்கள்...



# ஒப்பற்ற தலைவர்

தந்தை செல்வாவின் 41 ஆவது நினைவு தினம் இன்றாகும்

# தந்தை செல்வா

ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்

தொல்புரத்தைச் சேர்ந்த சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளைக்கும் அன்னம்மா கணபதிப் பிள்ளைக்கும் மூத்த மகனாக செல்வ நாயகம் மலேசியாவின் மிகவும் தூய்மை யான நகரமான இல்போ நகரில் 1898 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி பிறந்தார். அவருக்குப் பின் வேலுப் பிள்ளை தம்பதியருக்கு இரண்டு புத் திரர்களும் ஒரு மகளும் பிறந்தார்கள். வேலுப்பிள்ளை தம்பதியினர் தமது மழ லைச் செல்வங்கள் கல்வி கற்றுமேன் மக்களாக விளங்க வேண்டும் என ஆசைப்பட்டார்கள்.

அக்காலகட்டத்தில் பாடசாலைகள் குறைவு. இருந்த சில நல்ல பாடசாலை களும் அரச குடும்பத்தினரையும் பெரிய பணக்காரக் குழந்தைகளையுமே அனும தித்தன. எனவே, வேலுப்பிள்ளை தம்பதி யினர் தமது மழலைச் செல்வங்களை கல்வி கற்பதற்காக மலேசியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பினார்கள். அப்பொழுது செல்வநாயகத்துக்கு வயது நான்கு.

தனது இரண்டு சகோதரர்களுடனும் ஒரு சகோதரியுடனும் மலேசியாவிலி ருந்து கொழும்புக்கு கப்பலில் வந்திறங் கினார் பாலகன் செல்வநாயகம். அப் போது கொழும்பிலிருந்து காங்கேசன் துறைக்குப் புகையிரத சேவை ஆரம்பிக் கப்படாமையினால் மீண்டும் கப்ப லிலேயே காங்கேசன்துறைக்கு வந்து தமது சொந்த ஊரான தெல்லிப்பழைக்கு வந்தார். அங்கு அமெரிக்க மிஷன் பாட சாலையில் 5 ஆம் வகுப்பு வரை கல்வி பயின்றார். இந்த அமெரிக்க மிஷன் பாடசாலை தான் பின்பு யூனியன் கல் லூரியாகத் தரமுயர்த்தப்பட்டு கவனத் துக்குரியதாகும். சிறு வயதிலே செல்வ நாயகம் பெண் வேடம் பூண்டு நாடகங் களில் நடித்தாராம்.

ஐந்தாம் வகுப்பிற்குப் பின்னர் செல்வ நாயகம் யாழ்ப்பாணம் சென்று சென். ஜோன்ஸ் கல்லூரியில் சேர்ந்து சீனியர் கேம்பிரிட்ஜ் பரீட்சைக்குப் படிக்கத் தொடங் கினார். பின்னர் மாமனார் எஸ்.கே.பொன் னு சாமியின் உதவியுடன் கொழும்பு சென். தோமஸ் கல்லூரியில் சேர்ந்து தமது கல்வியைத் தொடர்ந்தார்.

சென். தோமஸ் கல்லூரியில் ஏறத் தாழ ஒன்றரை வருட காலம் கல்வி கற்று இன் டர்சயன்ஸ் பரீட்சையில் தேறிய செல்வநாயகம் தனது தம்பிமாரைப் படிப்பிப்பதற்காக 1917ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரிய ராகச் சேர்ந்தார்.

ஆசிரியராக இருந்துகொண்டே லண் டன் பல்கலைக்கழக பி.எஸ்.ஸி. விஞ் ஞானப்பட்டப் பரீட்சைக்கு வெளிவாரி மாணவராகத் தோற்றி அடுத்த ஆண்டே அதாவது, 1918இல் சித்தி எய்தினார்.

இத்தருணத்தில் மலேசியாவிலிருந்த அவரது தந்தையார் சுகவீனமுற்றிருந் தமையால் அவரைப் பார்க்க மலேசியா சென்று சுமார் ஒரு மாதம் வரை தங்கி யிருந்து மீண்டும் திரும்பினார். ஆனால், என்ன பரிதாபம்! செல்வநாயகம் இலங்கை திரும்பி வந்த ஓரிரு வாரங்களி லேயே அன்னாரது தந்தையார் மலேசியாவில் காலமானார்.

அதனால் குடும்பப் பொறுப்பு அனைத் தும் இளைஞரான செல்வநாயகத் தின் மேல் சுமத்தப்பட்டது. தமது பிற் காலத்தில் இலங்கைத் தமிழினத்தின் பொறுப்பெல்லாவற்றையும் சிரமேற் கொண்ட தமிழ்த் தந்தைக்கு தந்தை யில்லாத குடும்பத்தின் பொறுப்பைச் சுமப்பதா பெரிய காரியம்? இரண்டு தம்பி மாரையும், அருமைத் தங்கையையும் அரவணைத்துக் கொண்டு கொழும்பு சென்ற் தோமஸ் கல்லூரியில் தமது ஆசிரியப் பணியைத் தொடர்ந்தார்.

எனினும், அன்னாருக்கு சோதனை தொடர்ந்தது. யாழ்ப்பாணத்தில் அவ ரது இளைய சகோதரருக்கு கடும் சுக வீனம்.

அவரைப் பார்ப்பதற்கு தெல்லிப்பழை செல்ல லீவு கேட்டார், லீவு மறுக்கப்பட் டது. ஆசிரியர் பதவியை ராஜினாமாச் செய்து விட்டு தெல்லிப்பழைக்குச் சென் றார்.

தம்பியை நன்கு பராமரித்தும் என் செய்வது? பயனில்லாமல் போய்விட்டது. அருமைத் தம்பி இராஜசுந்தரம் தமது பதி னைந்தாவது வயதில் காலமானார்.

தம்பியின் இறுதிச் சடங்கு முடிந்து மீண்டும் கொழும்பு வந்த செல்வநாய கம், வெஸ்லி கல்லூரியில் ஆசிரியரா னார். எஸ்.ஜே.வி. ஆசிரியனாக இருந்த காலத்தில் நல்லாசிரியன் என்ற பெயரை பெற்றோர், ஆசிரியர், மாணவர்களிடம் பெற்றார். பிற்காலத்தில் நல்ல, நேர்மை யான சட்டத்தரணி என்று பெயரும் புகழும் பெற்றாரோ, அரசியலில் நுழைந்த பின் னர் எவ்வாறு உலக மக்கள் அனைவரா லும் தமிழ் பேசும் மக்களின் தன்னிகரில் லாத் தலைவன் என்றும், நேர்மையான அரசியல்வாதி என்றும் பெயரும் புகழும் பெற்றாரோ அதே போல அவர் நல்லாசிரியன் என்று பெய ரும் புகழும் பெற்றதில் எவ்வித ஆச்சரியமும் இருக்க முடியாது என்பது திண்ணம்.

அந்தக் காலத்தில் செல்வா ஆசிரியராக உலா வந்தபோது அன்னாரது நடை, உடை, பாவ னையைப் பின்பற்றிய மாணவர் கள் பலர். அதிகம் ஏன்? அவரது நடு உச்சி தலைவாரும் பழக்கத் தைக் கூட வெஸ்லிக் கல்லூரி மாணவர்கள் கொண்டிருந்தார் கள் என்றால் பாருங்களேன்.

1918ஆம் ஆண்டு விஞ்ஞா னப் பட்டதாரியான செல்வநாய கம் ஆசிரியராக இருந்தபோதே சட்டக்கல்லூரியில் சேர்ந்து 1924 ஆம் ஆண்டு சித்தி எய்தி சிவில் சட்டத் துறையைத் தேர்ந்தெடுத்து சட்ட வல்லு நரானார். அத்தொழிலில் தனது முழுக் கவனத்தையும் செலுத்தினார். அப்போ தெல்லாம் தமது வாழ்நாள் இலட்சியம் சுப்பிரீம் கோர்ட்டுக்கு நீதியரசராவதே என்று கூறுவது உண்டு.

எஸ்.ஜே.வி. புகழ்பெற்ற சட்டத்தரணி யாக இருந்த காலத்தில் அன்னாரது ஜூனியராக இருந்து பிற்காலத்தில் பிரபல சட்டத்தரணிகளாகிய சிலரை இங்கு பார்ப்பது சாலச் சிறந்ததாகும்.

பிரதம நீதியரசர் பதவி வகித்த நெவில் சமரகோன், எஸ். சர்வானந்தா, இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவின் தந்தை எட்மண்ட் விக்ரமசிங்க, வி. நவரட்ணராஜா, சி. இரங்கநாதன் என்போர்.

இவ்வாறு புகழ்பூத்த சட்டத்தரணியாக இருந்த செல்வா அரசியலில் நுழைந் தது அவரது போதாத காலமாக இருக்க



லாம். ஆனால், அந்த நிகழ்ச்சி ஈழத்து தமிழினத்தின் தவப்பேறாகும்!

1944ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி கொழும்பு சைவமங்கை யர் கழக மண்டபத்தில் ஜி.ஜி. பொன்னம் பலம் அவர்களின் தலைமையில் நடை பெற்ற அகில இலங்கைத் தமிழ்க் காங் கிரஸ் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் செல்வா கலந்துகொண்டார். தொடர்ந்து சோல்பரி கமின் முன் ஜி.ஜி. சாட்சிய ம ளித்தபோது செல்வா அவர்கள் அரு கிலிருந்து தம்மாலியன்ற பங்களிப்பை வழங்கினார்.

1947இல் நடைபெற்ற பொதுத் தேர் தலில் எஸ்.ஜே.வி.யின் பங்களிப்பு அளப் பரியது. தமிழ்க் காங்கிரஸ் யாழ். குடாநாட் டில் ஏழு வேட்பாளர்களும் கிழக்கு மாகா ணத்தில் இரண்டு வேட்பாளர்களுமாக மொத்தம் ஒன்பது வேட்பாளர்களை நிறுத் தியது. தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஜி.ஜி.க்கு அடுத்தபடியாக எஸ்.ஜே.வி தான் பிரதம பேச்சாளர். தமக்கே உரித் தான மெல்லிய உடல்வாகுடன் மென் மையாக ஆறுதலாக ஆனால், உறுதி யாக நிறுத்தி, நிறுத்தி அவர் பேசிய உரை கள் அனைவரையும் பெரிதும் கவர்ந் தன.

அந்தத் தேர்தலில் எஸ்.ஜே.வி. காங் கேசன்துறையில் போட்டி போட்டு வெற்றி பெற்றார். யாழ். குடாநாட்டில் ஆறு தொகு திகளில் தமிழ் காங்கிரஸ் பெரு வெற்றியீட் டியது. எஸ்.ஜே.வி.யின் ஜூனியராகக் கடமையாற்றிய கோப்பாய்க் கோமான் கு. வன்னியசிங்கம் கோப்பாய்த் தொகுதி யில் பெரு வெற்றியீட்டினார்.

1948ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி இலங்கைத் தமிழருக்கு ஒரு கரிநாள். அன்றுதான் இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டம் நாடாளுமன்றத் தில் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட் டத்தை எதிர்த்து தமிழ்க் காங்கிரஸ், இலங்கை, இந்தியக் காங்கிரஸ், லங்கா சமசமாஜக் கட்சி, பொல்சுவிக் லெனிஸ்ட் ரீட்சி சில சுயேச்சை உறுப்பினர்களும் வாக்களித் தனர். எனினும், சட்டம் நிறை வேற்றப்பட்டது. தொடர்ந்து ஐ.தே.கட்சி யின் டி.எஸ்.சேன நாயக்கா அரசு தமிழ ரைப் பலவீனப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டது. அதன் முதற்படியாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மந்திரிப் பதவிகள் வழங்கப்பட்டன.

ஜி.ஜி.க்கு கைத்தொழில் அபிவி ருத்தி, கடற்றொழில் அமைச்சு வழங்கப் பட்டது. ஜி.ஜி.யுடன் கே. கனகரத்தினம் (உதவி மந்திரிப் பதவி), சி.இராமலிங்கம், வி.குமாரசாமி போன்றோர் அரசுடன் இணைந்தனர். செல்வநாயகம், வன் னியசிங்கம், சிவபாலன் ஆகியோர் அர சுடன் இணைய மறுத்துவிட்டனர்.

1948ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஜி.ஜி. அமைச்சராகி அரசுடன் இணைந் தார். அன்றிலிருந்து தமிழ்க் காங்கிரஸ் ஜி.ஜி. குழு, செல்வநாயகம் குழு என இரண்டாகப் பிரிந்து வெவ்வேறாகக் கூட் டங்களும் நடத்தத் தொடங்கினர். அக்காலகட்டத்தில் செனட்டராக இருந்த இ.எம்.வி. நாகநாதன், செல்வநாயகம் குழுவில் இணைந்து கொண்டார்.

தொடர்ந்து தமிழரசுக் கட்சி ஸ்தாபிக் கப்பட்டதும் தன்னிகரில்லாத் தலைவ ராக தந்தை எஸ். ஜே.வி. விளங்கியதும், பின்னர் நடந்த அனைத்துத் தேர்தல் களிலும் அன்னார் வெற்றி பெற்றதும் அனைவரும் அறிந்ததே.

பெரியவர் செல்வநாயகம் தமி ழர் விடுதலைக்காக, தமிழ் மக் கள் அமைதியாக தமது தாயகத் தில் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக இறுதி வரை ஒரு சத்தியாக்கிரகியாக, ஊழ லற்ற வாழ்க்கையைக் கடைப்பிடித் தார். அமரர் செல்வநாயகத்தின் தீர்க்கதரிசனமான பண்டா– செல்வா ஒப்பந்தத்தையோ அல் லது பண்டா–டட்லி ஒப்பந்தத் தையோ மாறி, மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் நிறைவேற்றி இருந்தால் இத்தனை பொருள் இழப்புகள், உயிர்ச் சேதங்கள், அனர்த்தங்களை இந்த அழகிய, சிறிய நாடு தவிர்த்திருக்கும்.

அன்னார் தாம் காலமாகும் முன் தமது 79ஆவது வயதில் 'கட வுள் தான் இனி தமிழ் பேசும் மக்க ளைக் காப்பாற்ற வேண்டும்'.– என்றார்.

தந்தையின் கூற்று எத்தனை தீர்க்க தரிசனமான கூற்று! அக்கூற்று தீர்சன மான கூற்றாக இன்று மாறியிருப்பது தமிழ் பேசும் மக்களின் துரதிர்ஷ்டமே!



# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் 30


தரம்-5

பகுதி - I

22) 20 தொடக்கம் 30 வரையுள்ள எண்களில் அடுத்துள்ள இரண்டு எண்களைக் கூட்டும் போது?

1. ஓர் ஒற்றைஎண் கிடைக்கும்   2. கூற முடியாது
3. ஓர் இரட்டைஎண் கிடைக்கும்

23)





இங்கு ஒரு அன்னாசி பழத்தினதும் ஒரு வாழைப்பழத்தினதும் விலை என்ன?

1. 30.00   2. 45.00   3. 40.00

24) ஒரு மணிக்கூட்டு விலைக்கு எத்தனை வாழைப்பழம் வாங்கலாம்?


1. 12   2. 15   3. 10

25) உருவில் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கையும் செங்கோணத்தில் குறைந்த கோணங்களிலும் எண்ணிக்கையும் முறையே?



1. 12 , 2   2. 10 , 4   3. 8 , 4

26) இவ்வுருவில் காணப்படும் செவ்வகங்களின் எண்ணிக்கையும் முக்கோணங்களின் எண்ணிக்கையும் முறையே



1. 6 , 6   2. 9 , 6   3. 12 , 6

27) ஒரு தொட்டியின் கனவளவு 12 லீற்றர் ஆகும். ஒரு பூம்பாத்திக்கு நீர் ஊற்ற 6 லீற்றர் நீர் வேண்டும். ஒரு தோட்டம் ஒன்றில் இவ்வாறான 12 பூம்பாத்திகள் உள்ளன. எனின் அத்தோட்டத்திற்கு நீர் ஊற்ற எத்தனை தடவை தொட்டியை நிரப்ப வேண்டும்?

1. 7 தடவை   2. 6 தடவை   7. 5 தடவை

28) 100g பயறின் விலை - 20.00

½ kg கடலையின் விலை- 120.00

3 kg கௌப்பின் விலை - 660.00

½kg ற்குரிய விலையை இறங்குவரிசைப்படி ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் விடை

1. கௌப்பி, கடலை, பயறு
2. கௌப்பி, பயறு, கடலை
3. பயறு, கௌப்பி, கடலை

29) வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க?

| | | | |
|---|---|---|---|
| பால் | திரவம் | ஒட்சிசன் | |

1. வாயு   2. உலோகம்   3. திண்மம்

30) ஒரு பூங்காவில் சிவப்பு, வெள்ளை, மஞ்சள் என முறையே ரோஜா செடிகள் நடப்பட்டுள்ளது. எனின் 22 வதாக நடப்பட்டுள்ள ரோஜாச் செடியின் நிறம் என்ன?

1. சிவப்பு   2. வெள்ளை   3. மஞ்சள்

31) இங்கு 48 ஆவதாக மஞ்சள் ரோஜாச் செடி உள்ளது எனின் இங்குள்ள வெள்ளை ரோஜா செடிகளின் எண்ணிக்கை யாது?

1. 16   2. 17   3. 18

32) எனது வீட்டிற்கு மேற்கே குமரனின் வீடு உள்ளது. குமரனின் வீட்டிற்கு வடக்கே முரளியின் வீடு உள்ளது. எனவே எனது வீட்டிற்கு எத்திசையில் முரளியின் வீடு எங்கேயுள்ளது?

1. வடகிழக்கு   2. வடமேற்கு   3. வடக்கு

33) 4.00 மணிகாட்டும் கடிகாரம் ஒன்றை முகம் பார்க்கும் கண்ணாடியில் காணும் போது எத்தனை மணியாகக் காட்டும்?


1. 4.00   2. 7.00   3. 8.00

34) சரியான ஒழுங்கு முறையில் எழுதப்பட்ட விடையை எழுதுக?

1. கிராமம் → நகரம் → மாகாணம் → மாவட்டம் → நாடு
2. கிராமம் → நகரம் → மாவட்டம் → மாகாணம் → நாடு
3. கிரமம் → மாவட்டம் → நகரம் → மாகாணம் → நாடு



## சிறுவர் பூங்கா



கனவு என்பது தூக்கத்தில் காண்பது அல்ல. உங்களை தூங்க விடாமல் செய்வது.

-அப்துல் கலாம்

## நிறம் தீட்டுவோம் வாங்க...!



## புள்ளிகளை இணையுங்கள். யார் என்று பார்க்கலாம்?



## 5 வித்தியாசம் கண்டுபிடியுங்கள்





## தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்' சிறுவர் சஞ்சிகைப் பிரிவு 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

# ஜி.எஸ்.பி பிளஸ் வரி நிவாரணத்திற்கு பின்னர் மீன் ஏற்றுமதி மூலம் வருமானம் அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 26

ஐரோப்பிய ஒன்றியத்தால் மீன் ஏற்றுமதிக்காக தடை நீக்கப்பட்ட பின்னர் கடந்த 21 மாத காலப்பகுதியில் 58 ஆயிரத்து 578.9 மெற்றிக் தொன் மீனை இலங்கை ஏற்றுமதி செய்து இருக்கின்றது எனக் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த அரசின் காலப் பகுதியில் ஐரோப்பிய ஒன்றியத்தால் எமது மீன் ஏற்றுமதிக்கு எதிராக விதிக்கப்பட்ட தடை 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நீக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தால் மீன் ஏற்றுமதியில் நடைமுறைப்படுத்த வேண்டியிருந்த நடை முறைகள் அப்போதைய அரசால் மேற்கொள்ளப்படாமையே இத் தடைக்குக் காரணமாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் ஐரோப்பிய ஒன்றியத்துடன் நடத்திய பேச்சின் காரணமாக இந்த நாடுகளுக்கு மீன் ஏற்றுமதி தொடர்பில் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது.

இதற்கமைவாக 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலான 21 மாத காலப் பகுதியில் இலங்கையிலிருந்து 58 ஆயிரத்து 578.9 மெற்றிக் தொன் ஏற்றுமதி



செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் பெறப்பட்ட வெளிநாட்டு நாணய வருமானம் 9 ஆயிரத்து 211 கோடி ரூபாவாகும்.

மீன் ஏற்றுமதி தடைக்கு முன்னதாக 2014 ஆம் ஆண்டிலும் தடை விதிக்கப்பட இடை காலப்பகுதியை நோக்கும் போது மீன் ஏற்றுமதி வெகுவாக வீழ்ச்சியடைந்தது.

2014 ஆம் ஆண்டு 26 ஆயிரத்து 320 மெற்றிக்தொன் மீன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டது. இது ஏற்றுமதி தடை நிலவிய காப்பகுதியில் 18 மாதங்களுக்கு 26 ஆயிரத்து 129 மெற்றிக்தொன் ஆகும்.

இந்த காலப்பகுதியில் பெறப்பட்ட வருமானத்தின் பெறுமதி 210 கோடி ரூபா வாகும்.

2018 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் மார்ச் மாதம் உள்ளிட்ட 3 மாத காலப்பகுதிக்கு இது உட்பட்டதாகும்.

இந்த தகவல்கள் சமீபத்தில் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர நடத்திய திட்ட அபிவிருத்தி தொடர்பான மதிப்பீட்டு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டன.

## பரீட்சை திணைக்களத்தின் பெறுபேறுகளை ஒன்லைன் மூலம் உறுதி செய்ய முடியும்!



கொழும்பு, ஏப். 26

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பெறுபேறுகளை ஒன்லைன் முறையில் உறுதி செய்ய முடியும்.

இதன் முதற்கட்ட நடவடிக்கை நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

6 லட்சத்துக்கு மேற்பட்ட சான்றிதழ்களின் பெறுபேறுகளை உறுதி செய்வதற்காகப் பரீட்சைத் திணைக்களத்துக்குக் கிடைக்கின்றன.

இவற்றில் பெரும்பாலானவை நாட்டிலுள்ள வலய அலுவல்களிலிருந்து கிடைக்கப் பெறும் கோரிக்கையாகும் என்று பரீட்சைத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை சான்றிதழை உறுதி செய்யும் நடவடிக்கையை பரீட்சைத் திணைக்களத்தின் சான்றிதழ்கிளை மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

உறுதி செய்வதற்கான கோரிக்கையை பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்போது இடம் பெறும் முறைகேடுகள், கால தாமதம் ஆகியவற்றைத் தடுப்பதே இதன் நோக்கமாகும்.

இதற்காகவே இந்த ஒன்லைன் முறை கணனியுடன் நேரடி தொடர்பைக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதனூடாக வலய அலுவலகங்களுக்குப் பெறுபேறுகளை உறுதி செய்யும் அதிகாரம் பரவலாக்கப்பட்டுள்ளது.

அனைத்துப்பணிகளும்பரீட்சைத் திணைக்களத்தின் முழுமையான கண்காணிப்பில் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு கல்விஅமைச்சர் அகில விராஜ் காரியவசம் தலைமையில் பரீட்சைத் திணைக்களத்தில் இடம் பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.எஸ். இராதாகிருஷ்ணன், பரீட்சைத் திணைக்களத்தின் ஆணையாளர் சனத் பூஜித் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (கு)

## நடு வீதியிலேனும் மே தினக் கூட்டத்தை நடத்துவோம்!

**முன்னிலை சோசலிச கட்சி கூறுகிறது**

கொழும்பு, ஏப். 26

நடு வீதியிலேனும் மே தினக் கூட்டத்தை நடத்துவோம் என முன்னிலை சோசலிச கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் பிரசார செயலாளர் புபுது ஜாகொட கொழும்பு ஊடகமொன்றுக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மே மாதம் முதலாம் திகதி உலக தொழிலாளர் தின நிகழ்வுகளை நடத்துவதற்கு அரச மைதானங்களை வழங்காத காரணத்தினால் நடு வீதியிலேனும் மே தினக்கூட்டம் நடத்தப்படும்.

மெய்யான மாற்றத்திற்கு இடதுசாரி பலம் என்ற தொனிப் பொருளில் இம்முறை மே தினக் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

மே மாதம் முதலாம் திகதி மே தினக் கூட்டத்தை நடத்துவதில்லை என அரசு தீர்மானித்துள்ளது.

எனினும், இந்தத் தீர்மானத்தைக் கவனத்திற் கொள்ளாது மே தினக் கூட்டத்தை அந்தத் தினத்தில் நடத்துவதற்கு அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதற்கென கொழும்பு ஹைட் மைதானத்தை வழங்குமாறு விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது என்றும் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

## இந்திய பெண்களுக்கு நாமல் எம்.பி பயிற்சி!



காஷ்மீர் மகளிர் ரக்பி அணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரர் பயிற்சி வழங்கியுள்ளனர்.

ஜம்மு – காஷ்மீர் ரகர் விளையாட்டு அணியின் அழைப்பின் பேரில் மஹிந்தவின்புதல்வர்கள் இந்தியா சென்றுள்ளனர்.

அவர்கள் ஜம்மு காஷ்மீர் ரகர் விளையாட்டு பெண்கள் அணியைச் சேர்ந்த 60 போட்டியாளர்களுக்குப் பயிற்சி அளித்து வருகின்றனர்.

இந்தப்பயிற்சிக்காக ஆறு பயிற்சியாளர்கள் இணைந்துள்ளனர்.

வீராங்கனைகளுக்கான பயிற்சி நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், தொடர்ந்தும் நான்கு நாள்களுக்கு நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நடவடிக்கைகளில் நாமலின் சகோதரர் ரோஹித ராஜபக்ஷவும் இணைந்துள்ளார்.

பயிற்சியின் இடையில் காஷ்மீர் அரசியல் தலைவர்கள் மற்றும் பிரமுகர்களுடன் நாமல் இருதரப்பு கலந்துரையாடலிலும் ஈடுபட்டுள்ளார்.

## கண் மற்றும் அவயவங்களை தானம் செய்வதற்கான உடன்பாட்டு பத்திரம் கைச்சாத்திடும் வேலைத்திட்டம்!

கொழும்பு, ஏப். 25

மஹர கடவத்த வெசாக் வலயத்திற்கு அமைவாக கண்களைத் தானம் செய்வதற்கான உடன்பாட்டு பத்திரம் கைச்சாத்திடும் வேலைத்திட்டம் நேற்று ஆரம்பமானது.

கொழும்பு வித்யா மாவத்தையில் உள்ள கண் தான சங்கத் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில் நிதி மற்றும் ஊடகத்துறை பிரதிஅமைச்சர் லசந்த அழகியவண்ணவின் எண்ணக்கருவிற்கு அமைவாக லசந்த அழகியவண்ண அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.



இந்த நிகழ்வு நிதி மற்றும் ஊடகத்துறை பிரதி அமைச்சர் லசந்த அழகியவண்ண தலைமையில் இடம்பெற்றது.

2017 ஆம் ஆண்டில் நடை பெற்ற இந்த வெசாக் வலயத்தை பார்வையிடுவதற்காக வருகைதந்த நன்கொடையாளர்க ளினால் கைச்சாத்திடப்பட்டு கையளிக்கப்பட்ட கண் மற்றும் அவயவங்களை நன்கொடையாக வழங்குவதற்கான உறுதிப்பத்திரங்களின் 'ஆ' பிரிவு உத்தியோகபூர்வமாக இலங்கை கண்தான சங்கத்திடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

(க)

காலைக்கதிர் Kalaikkathir



# ஒபாமா அரசின் விசா சலுகையை ரத்துச் செய்ய ட்ரம்ப் அவசர முடிவு

## இந்தியர்களுக்குப் பெருமளவில் பாதிப்பு

அமெரிக்காவில் எச்.1 - பி நுழைவு இசைவு (விசா) சலுகை பெற்றவர்களின் வாழ்க்கைத் துணைவர்களும் (கணவன் அல்லது மனைவி) அங்கு பணி புரியும் வகையில் வழங்கப் படும் எச் - 4 நுழைவு இசைவு சலுகை ரத்து செய்யப்படலாம் எனக் கூறப்படுகிறது.

முந்தைய ஒபாமா அரசு அளித்த இந்த சிறப்பு சலுகையை தற்போதைய ட்ரம்ப் அரசு ரத்து செய்ய திட்டமிட்டிருப்பதால் இந் தியர்கள் பெருமளவில் பாதிக்கப் படும் சூழல் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவில் ஒரு லட்சம் இந்தியர்கள் எச்.1 - பி நுழைவு இசைவு பெற்று பணிபுரிந்து வரு கின்றனர். இவர்களில் பெரும்பா லனவர்கள் தங்களது வாழ்க்கை துணைவர்களுக்கு எச் - 4 நுழைவு இசைவு பெற்று பயன டைந்து வருகின்றனர்.

சிறப்பு சலுகையான எச் - 4 நுழைவு இசைவை பயன்படுத்தி அமெரிக்காவில் பணியாற்றுப வர்களின் எண்ணிக்கை 71 ஆயிரத்தைத் தாண்டும். இதில், 90 சதவீதம் பயனாளர்கள் இந்தி யர்கள் ஆவர். குறிப்பாக, இந்தி ய பயனாளர்க ளில் 93 சதவீதம் பேர் பெண்கள் என்பது குறிப் பிடத்தக்கது.

வேலைவாய்ப்புகளில் அமெ ரிக்கர்களின் நலன்களை பாது காக்கும் வகையிலேயே எச்-4 நுழைவு இசைவு முறை ரத்து செய்யப்படுவதாகக் கூறப்படுகி றது.

எச் - 4 நுழைவு இசைவை ரத்து செய்யும் அறிவிப்பை கோடை இறுதியில் எதிர்பார்க் கலாம் என்று அமெரிக்க குடியு ரிமை மற்றும் குடியேற்ற சேவைத் துறையின் இயக்குநர் பிரான்சிஸ்சிஸ்னா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புதிய விதிகளை அறிமுகம் செய்யவும், புதிய வழிகாட்டுதல் களை வெளியிடவும், பழைய விதிகளை திருத்தம் செய்யவும், குடியேற்ற அமைப்பின் நிர்வா கத்தில் அமெரிக்க பணியாளர் களின் நலன்களை காக்கவும் இந்த நடவடிக்கை அவசியமா கிறது.

விதிமுறைகளை மாற்றிய மைப்பது தொடர்பாக பொதுமக் கள் தங்களது கருத்துகளை தெரி விக்கலாம். - என்றார் அவர்.

## இந்திய வம்சாவளிப் பெண் சிங்கப்பூரில் அமைச்சரானார்

சிங்கப்பூர், ஏப். 26

சிங்கப்பூரில் இந்திய - சீன வம்சா வளியை சேர்ந்த பெண் தலைவர் இந் திராணி ராஜா அமைச்சரவை அந்தஸ்த் துள்ள அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

சிங்கப்பூரில் பிரதமர் லீ சியன் லூங், தனது அமைச்சரவையை நேற்றுமுன் தினம் மாற்றி அமைத்தார். இளைய தலைமுறையினருக்கு வாய்ப்பு அளிக் கும் வகையில் இந்த நடவடிக்கையை எடுத்தார்.

இதில் இந்திய - சீன வம்சாவளியை சேர்ந்த பெண் தலைவர் இந்திராணி ராஜா (வயது 55) அமைச்சரவை அந்தஸ்த் துள்ள அமைச்சராக நியமிக் கப்பட்டார். இவர் 2006 - 11 காலகட்டத்தில் நாடாளு மன்ற துணை சபாநாயகராக இருந்துள் ளார். இந்தியரான இவரது தந்தை ராஜா, மூத்த பொலிஸ் அதி காரியாக பணி ஆற்றியவர். இவரது தாயார் சீனர்.

இவருக்கு பிரதமர் அலுவலக



பொறுப்பு வழங்கப்பட்டு உள்ளது. மேலும் நிதி மற்றும் கல்வித்துறையி லும் இரண்டாவது அமைச்சராக செயற் படுவார்.

இவரையும் சேர்த்து லீ சியன் லூங் அமைச்சரவையில் 3 பெண்கள் அமைச் சரவை அந்தஸ்து வகிக்கின்றனர். மற்ற இருவர் கிரேஸ் பு, ஜோசபின் தியோ ஆவர்.

இந்திய வம்சாவளியை சேர்ந்த எஸ்.ஈஸ்வரன், தகவல் தொடர்பு மற் றும் தகவல் துறை அமைச்சராக நியமிக் கப்படுவார் எனவும் தகவல்கள் வெளி யாகி உள்ளன. இந்திய வம்சாவளியை சேர்ந்த ஜனில் புதுசேரி, போக்குவரத்து துறை ராஜாங்க அமைச்சராக நியமிக் கப்படுகிறார் எனவும் அந்த தகவல்கள் மேலும் கூறுகின்றன.

# தேவாலயத்தின் மீது சூடு நைஜீரியாவில் 10 பேர் பலி



லாகோஸ், ஏப்.26

நைஜீரியாவில் தேவாலயம் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடுத் தாக்குத லில் 16 பேர் பலியாகி உள்ளனர்.

நைஜீரியாவில் முகமது புகாரி அதிப ராக இருந்து வருகிறார். இந்த நிலையில் அங்குள்ள பழங்குடியின முஸ்லிம் மக்களுக்கும், கிறிஸ்தவ மக்களுக்கு மிடையே மோதல் ஏற்பட்டு வருகிறது.

அந்நாட்டில் புலானி பழங்குடியினப் பிரிவைச் சேர்ந்த முஸ்லிம்கள் ஆடு மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின் றனர். கிறிஸ்தவர்கள் விவசாயம் செய் யும் பிரிவினராக உள்ளனர். நிலங்க ளில் ஆடுகளை மேய விடுவது பற்றிய விவகாரத்தில் இரு பிரிவினருக்கும் இடையே மோதல் நடந்து வருகின்றது.

இந்நிலையில், குவெர் கிழக்கு நகரில் ஆயர் எம்பலம் பகுதியில் அமைந்த தேவாலயம் ஒன்றின் மீது துப்பாக்கிக ளுடன் சென்ற இடையர் பிரிவினர் தாக்கு தல் நடத்தியுள்ளனர். இந்த சம்பவத்தில் 16 பேர் பலியாகி உள்ளனர் என உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 2 பேர் கிறிஸ்தவ மத போதகர்கள் ஆவர்.

இந்த வருட தொடக்கத்தில் மகுர்டி பகு தியில் நடந்த மோதலில் 73 பேர் கொல்லப்பட்டனர். புலானி பிரிவைச் சேர்ந்தவ ரான அதிபர் புகாரி, இடையர் கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களைத் தடுக்க எந்த நடவடிக்கையையும் எடுக்க வில்லை எனக் குற்றஞ்சாட்டி விமர்சனங் கள் எழுந்தன. ஆனால் இதற்கு அதிபர் நிர் வாகம் மறுப்பு தெரிவித்துள்ளது.

## பொலிஸ் வாகனம் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் 8 பொலிஸார் பலி

இஸ்லாமாபாத், ஏப். 26

பாகிஸ்தானின் குவெட்டா நகரில் பொலிஸ் வாகனத்தின் மீது நேற்று முன்தினம் பயங் கரவாதிகள் நடத்தி ய தாக்குதலில் 8 பொலிஸார் உடல் சிதறி உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தானில் உள்ள பலு சிஸ்தான் மாகாணத்தின் தலை நகரான குவெட்டாவில் பொலி ஸாரை பணிக்கு ஏற்றிச் சென்ற வாகனத்தின் மீது நேற்றுமுன் தினம் காலை பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

குவெட்டா நகரின் விமான நிலையப் பகுதியில் நடத்தப்பட்ட இந்த வெடிகுண்டு தாக்குதலில் எட்டு பொலிஸார் உடல் சிதறி சம் பவ இடத்திலேயே பலியாகினர். மேலும் 15 இற்கும் அதிகமானவர் கள் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



இதேபோல், குவெட்டா நகரின் எல்லைப் பகுதியில் பயங்கரவாதி கள் நடத்திய மற்றொரு தாக்குதலில் 8 பேர் காயமடைந்துள்ளனர் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன

# எண்ணெய்க் கிணறு தீப்பிடித்ததில் இந்தோனேஷியாவில் 10 பேர் பலி

இந்தோனேஷியாவில் எண் ணெய்க் கிணறு தீப்பிடித்து எரிந்ததில் 10 பேர் பலியாகி உள்ளனர்.

இந்தோனேஷியாவின் மேற்கே அமைந்த அசே மாகாணத்தில் எண் ணெய்க் கிணறு ஒன்று அமைந்துள் ளது. இங்கு ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் பலியாயுள்ளனர். எண்ணற்றோர் காயமடைந்துள்ளனர்.

இந்த நிலையில் அந்நாட்டின் பேரி டர் கழகம் இன்று வெளியிட்டுள்ள செய்தியில் -

குழாய்களை வெல்டிங் செய்யும் பொழுது இந்தத் தீ விபத்து ஏற்பட்டி ருக்கலாம் என அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

எண்ணெய் கிணறில் சட்டவிரோத முறையில் துளையிட்டமையால் 5



பேர் கொல்லப்பட்டனர் என்றும் 12க் கும் மேற்பட்டோர் காயமடைந்து உள் ளனர் என்றும் அன்டாரா அரசு கழகம் இதற்கு முன் வெளியிட்ட தகவலில் தெரிவித்து உள்ளது.

# ஆப்கானிஸ்தான் குண்டுவெடிப்பில் சிக்கிய அமெரிக்க வீரருக்கு ஆண் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை வெற்றி

ஆப்கானிஸ்தான் குண்டுவெடிப்பில் சிக்கிய அமெ ரிக்க வீரருக்கு ஆண் உறுப்பு மற்றும் விதைப்பை மாற்று அறுவை சிகிச்சையை டொக்டர்கள் வெற்றிகர மாக நடத்தி முடித்து உள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் பணியாற்றியபோது அமெரிக்க வீரர் ஒருவர் குண்டுவெடிப்பில் சிக்கினார். இதில் அவரது ஆண் உறுப்பும், விதைப்பையும் பெருத்த சேதம் அடைந்தன.

அந்த வீரருக்கு அமெரிக்காவில் மேரிலாந்து மாகாணத்தில் பால்டிமோர் நகரில் உள்ள ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழக வைத்தியசாலையில் டொக்டர்கள் ஆண் உறுப்பு மற்றும் விதைப்பை மாற்று அறுவை சிகிச்சையை சமீபத்தில் வெற்றிகரமாக நடத்தி முடித்து உள்ளனர். அவர்கள் இறந்து போன ஒரு கொடையாளியின் ஆண் உறுப்பு, விதைப்பை மற்றும் அடிவயிற்று சுவரின் ஒரு பகுதி ஆகியவற்றை தான மாகப்பெற்று, அந்த வீரருக்கு பொருத்தி உள்ளனர். இந்த அறுவை சிகிச்சையை 11 டொக்டர்களை கொண்ட குழுவினர், 14 மணி நேரம் செய்து உள்ளனர்.

உலகின் முதலாவது ஆண் உறுப்பு மற்றும் விதைப்பை மாற்று அறுவை சிகிச்சை இதுதான் என தகவல்கள் கூறுகின்றன.

ஆண் உறுப்பு மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை செய்கிறபோது, அந்த நபரால் தாம்பத்திய வாழ்வில் ஈடுபட முடியாது. ஆனால் இந்த வீரருக்கு ஆண் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டு உள்ளதால், அவர் மீண்டும் தாம்பத்திய வாழ்வில் ஈடுபட முடியும் என டொக்டர்கள் தெரிவித்தனர். அவர் 6 முதல் 12 மாதங் களுக்குள் இயல்பான வாழ்க்கை வாழ முடியும் என வும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்

காலைக்கதிர் Kalaikkathir



# இறப்பதற்கு அனுமதி கோரும் 5,259 குஜராத் விவசாயிகள்

## நீல சுவீகரிப்பால் பெரும் பாதிப்பாம்



குஜராத்தில் நிலங்களை அரசாங்கம் கையகப்படுத்திவிட்டமையால் பாதிக்கப்பட்ட 5000 விவசாயிகள் பிழைக்க வழியில்லாமல் இறப்பதற்கு அனுமதி கேட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குஜராத் மாநிலம் பாவ்நகர் மாவட்டத்தில் உள்ள 12 கிராமங்களைச்சேர்ந்த 5000இற்கும் மேற்பட்ட மக்கள் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் மனுக்கள் அளித்தனர். அதில், குஜராத் மாநில அரசும், குஜராத் பவர் கார்ப்ப ரேசன் லிமிடெட் நிறுவ னமும் தங்கள் நிலங்களைப் பறித்து விட்டனர் எனவும், பிழைக்க வழியில்லை என்பதால்இறப்பதற்குஅனுமதிவழங்க வேண்டும் எனவும் அவர்கள் கூறியிருந்தனர்.

இதுபற்றி விவசாயிகளுக் காகப் போராடி வரும் குஜராத் கேதுத் சமாஜ் அமைப்பைச் சேர்ந்த நரேந்திரசின் கோகில் கூறுகையில் -

நிலங்களை அரசு கையகப் படுத்தியமையால் பாதிக்கப்பட்ட 12 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் என மொத்தம் 5,259பேர்பிழைப்புக்குவழியில்லாமல் இறப்பதற்கு அனுமதி கேட்டுக் கடிதம் எழுதியுள்ளனர். ஜனாதிபதி, பிரதமர் மற்றும் குஜராத் முதல்வருக்கும் கடிதங்கள் அனுப்பியுள்ளோம்

கையகப்படுத்திய 5 ஆண்டுகளுக்குள் திட்டத்தை நிறைவேற்றாவிட்டால் அந்த நிலங்களை நிறுவனத்தால் கைப்பற்ற முடியாது. ஆனால் சட்டத்துக்குப் புறம்பாக 20 ஆண்டுகளாக அந்த நிலங்களில் இருந்து விவசாயிகளை வெளியேற்றும் முயற்சி நடக்கிறது. இதற்காகக் காவல் துறையைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். அமைதியாக போராடிவரும் விவசாயிகள் மீது இரண்டு முறை பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர். அரசாங்கத்தால் தொடர்ந்து அச்சுறுத்தப்படுகிறோம் - என்றார்.

# உறவினர்களாக இருந்தாலும் ஜெயா வழியில் தூக்கி எறிவேன்

## எச்சரிக்கை விடுக்கிறார் தினகரன்



தஞ்சாவூர், ஏப். 26

கட்சிக்கு எதிராகக் கருத்தை சமூக வலைத்தளங்களில் பதிவு செய்தால் உறவினர்களாக இருந்தாலும் ஜெயலலிதா வழியில் தூக்கி எறிவேன் என்று டி.டி.வி. தினகரன் பேசினார்.

காவிரி மேலாண்மை சபை அமைக்காத மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்து தஞ்சையில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் அம்மா மக்கள் முன்னேற்ற கழகத் துணை பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் கூறியவை வருமாறு: -

ஜெயலலிதாவின் தொண்டர்கள் 90 சதவீதம் பேர் எங்கள் பக்கம் உள்ளனர். இரட்டை இலை சின்னம் வழக்கில் நிச்சயம் நீதிமன்றத்தில் நல்ல தீர்ப்பு வரும் என்ற நம்பிக்கை உள்ளது.

தமிழகத்தில் ஆட்சியில் இருப்பவர்கள் உளவுத்துறையை பயன்படுத்தி பல்வேறு தவறான தகவல்களைச் சமூக வலைத்தளங்களில் பரப்புகிறார்கள். எனவே கட்சிக்கு எதிரான கருத்தை யாராவது பதிவு செய்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். யாராக இருந்தாலும் மன்னிக்கமாட்டேன். உறவினர்களாக இருந்தாலும் ஜெயலலிதா வழியில் தூக்கி எறிவேன்.

யாருக்கும், எதற்காகவும் பயந்து பின் வாங்க மாட்டேன். என்னை எளிதில் ஏமாற்றி விடலாம் என்று யாரும் நினைத்து விடக்கூடாது. உறவுகளையும், நட்பையும் மதிப்பவன் நான். விட்டில் பூச்சிகளைப் போல் துரோகிகளிடம் மாட்டிக்கொள்ளாதீர்கள். இணையதள பதிவு உண்மையா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்த ஆண்டு நடக்கும் நாடாளுமன்ற தேர்தல் முடியும் வரை காவிரி மேலாண்மை சபையை மத்திய அரசு அமைக்க போவதில்லை. அதே சமயம் காவிரி நீரை பெறுத்தரும் வரை எங்கள் போராட்டம் ஓயாது. ஜெயலலிதாவின் ஆட்சியை தொண்டர்கள் ஆதரவோடு விரைவில் அமைப்போம். - என்று பேசினார்.

# கர்நாடகத்தில் மோடி தேர்தல் பிரசாரத்தில்!



பெங்களூர் ஏப். 26

மே முதலாம் திகதி முதல் கர்நாடகாவில் பிரதமர் மோடி தேர்தல் பிரசாரம் செய்யவுள்ளார்.

224 தொகுதிகளைக் கொண்ட கர்நாடக சட்ட சபைத் தேர்தல் அடுத்த மாதம் (மே) 12ஆம் திகதி நடக்கவிருக்கிறது. இதையொட்டி வேட்புமனுத் தாக்கல் கடந்த 17ஆம் திகதி தொடங்கி நடைபெற்று வருகின்றது. முதல் அமைச்சர் சித்தராமையா, கர்நாடக பா.ஜனதா தலைவர் எடியூரப்பா, ஜனதா தளம்(எஸ்) கட்சி மாநில தலைவர் குமாரசாமி உள்பட முக்கிய தலைவர்கள் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

அங்கு ஆளும் காங்கிரஸ் - பா.ஜ.க. இடையே கடும் போட்டி நிலவு கிறது. கருத்து கணிப்பு முடிவுகள் யாருக்கும் சாதகமாக இல்லாத சூழ்நிலை நிலவுகின்றது எனவும், தொங்கு சட்ட சபை அமைய வாய்ப்புள்ளது எனவும் கூறப்படுகிறது.

இந்நிலையில், கர்நாடக மாநிலத்தில் தனது தேர்தல் பிரசாரத்தை மே 1ஆம் திகதி முதல் பிரதமர் மோடி தொடங்க இருக்கிறார்.

மேலும் பிரதமர் மோடி மே முதலாம் திகதி முதல் மே 9ஆம் திகதி வரை அங்கு பிரசாரம் செய்யவுள்ளார். மே முதலாம் திகதி உடுப்பி, சாம்ராஜ் நகர் மற்றும் பெலகாவியில் பிரசாரம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதில் மூன்று மாவட்டங்களில் ஒவ்வொரு நாளும் மூன்று இடங்களில் பிரசாரம் நடத்தப்பட உள்ளது. மாநிலத்தின் 15 இடங்களில் பா.ஜ.க. வேட்பாளர்களை ஆதரித்து மோடி பிரசாரத்தைச் செய்ய திட்டமிட்டுள்ளார் என பா.ஜ.க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(உ)

# நான் எறும்புதான்; யானையின் காதில் அது புகுந்தால் என்னாகும் தெரியுமா?

## அமைச்சர் ஜெயக்குமாருக்கு கமல் பதிலடி



சென்னை, ஏப். 26

யானையின் காதில் எறும்பு புகுந்தால்என்னஆகும்? எனஅமைச்சர் ஜெயக்குமாருக்கு மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் பதிலடி கொடுத்துள்ளார்.

சென்னையில் அமைச்சர் ஜெயக்குமார் நேற்றுமுன்தினம் நிருபர்களுக்கு பேட்டி யளித்த போது -

‘கட்டெறும்பு சிற்றெறும்பு ஆன கதை என்று மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசனை விமர்சித்தார்.

இதற்கு, மாதிரி கிராம சபை கூட்டத்தில் கமல்ஹாசன் பதிலளித்து கூறியவை வருமாறு: -

என்னை எறும்பு என்று சில பேர் சொல்லி இருக்கிறார்கள். யானை காதில் எறும்பு போனால், என்ன ஆகும்? நான் எறும்பு என்று ஒத்துக் கொள்கிறேன். அதற்காக நீங்கள் யானை என்று நினைத்துக்கொள்ளாதீர்கள். நீங்கள் என்ன மிருகம் என்னவென்று நாங்கள் முடிவு செய்து வைத்துவிட்டோம்.

உங்கள் காதில் போகணுமா போக கூடாதா? என்பதை எறும்பின் சுத்தம் கருதி நாங்கள் செய்வோமா, மாட்டோமா? என்பதை முடிவு செய்துகொள்வோம்.

எனவே இந்த விளையாட்டை எல்லாம் இங்கே விளையாடாதீர்கள். அந்த வார்த்தை ஜாலம் எல்லாம் முடிந்துவிட்டது. இது செயல் படும் நேரம். - என்று கூறினார்.

# காவிரி விவகாரத்தை ஒட்டி சரத்குமார் உண்ணாவிரதம்

சென்னை, ஏப். 26

காவிரி மேலாண்மை வாரியம் சபை அமைக்காத மத்திய அரசை கண்டித்து சமத்துவ மக்கள் கட்சி சார்பில் சென்னையில் நேற்று உண்ணாவிரதம் நடைபெற்றது.

சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகில் உண்ணாவிரத போராட்டம் தொடங்கியது. இதில் சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சரத்குமார் மற்றும் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

உண்ணாவிரதத்தைத் தமிழக காங்கிரஸ் தலைவர் திரு நாவுக்கரசர் தொடங்கி வைத்தார்.

உண்ணாவிரதம் இருந்தவர்கள் காவிரி மேலாண்மை சபையை மத்திய அரசு உடனே அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி பேசினார்கள்.

உண்ணாவிரதத்தில் பங்கேற்ற சரத்குமார் மற்றும் தொண்டர்கள் அனைவரும் கறுப்புச் சட்டை அணிந்திருந்தனர்.

காவிரி மேலாண்மை சபை அமைக்கும் வரைத் தாம் தொடர்ந்து கறுப்பு சட்டையையே அணியப் போகிறார் என சரத்குமார் தெரிவித்தார்.



## 2020 இற்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் பௌசி யாழ் இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற வடக்கு மாகாணப் பாடசாலைகளின் நூலகங்கள் மற்றும் சமூகமட்ட நூலகங்களுக்கான நூல்களை வழங்கும் நிகழ்வில் பங்கேற்றார்.

இதன் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ் மக்களுக்கான தீர்வுகள் வழங்கப்படாவிட்டால் நிர்வாக முடக்கங்களை முன்னெடுப்போம் என அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் அமைச்சர் பௌசியிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அவர் –

தமிழ் மக்களுடைய இனப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க வேண்டுமென்று நல்லாட்சி அரசு அபிப்பிராயம் வைத்துள்ளது. ஆலோசனைகளையும் நடத்தி வருகின்றது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

எனவே 2020ஆம் ஆண்டுக்குள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசு தீர்வை முன்வைக்கும் என எண்ணுகின்றேன். – என்றார்.

கூட்டு எதிரணி கோருவது போன்று பொதுத் தேர்தலை இப்போது நடத்த முடியுமா என்று அமை சர் பௌசியிடம் முன்வைக்கப்பட்ட கேள்விக்கு–

அது மஹிந்தவின் யோசனை. மடத்தனமான யோசனை. தற்போது அரசைக் கலைக்க முடியாது? அரசைக் கலைக்காது எவ்வாறு பொதுத் தேர்தலை நடத்த முடியும். அது நடக்கின்ற விடயம் அல்ல. 2020ஆம் ஆண்டு வரை அரசு நீடிக்கும். எதிர்வரும் 08 ஆம் திகதிக்குப் பின்னர் நல்லாட்சி அரசு சக்தி வாய்ந்த அரசாகச் செயற்படும். – என்றார். (ஐ-7)

## வடமாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணையைக் கோருவதற்கு மாகாண சபை உறுப்பினர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரிடம் செய்தியாளர்கள் நேற்றுக் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளிக்கும் போது ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மாகாண அமைச்சர்கள் மீதான மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தி உண்மை நிலை அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு பிரதம செயலாளருக்குப் பணித்துள்ளேன். அந்த அமைச்சர்கள் தொடர்பில் தற்போது எதுவுமே கூற முடியாது. விசாரணையின் பின்னரே எந்த முடிவுக்கும் வர முடியும். – என்றார்.

வடக்கு மாகாண சபையின் முதலாவது அமைச்சரவையில் இடம்பெற்றவர்கள் மீது குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டு, அவர்கள் இருவரும் பதவி விலகி ஓர் ஆண்டு நிறைவடைய முன்னர் புதிய அமைச்சரவையின் அமைச்சர்கள் மீது மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ – 7)

## கூலிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முஸ்லிம்களின் பொருளாதாரத்தை அழிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டன எனவும், உள்ளூர் முகவர்கள் கூலிக்கு அமர்த்தப்பட்டு, இவ்வாறான இனவாதச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டொரிஸை நேற்றுக் கைத்தொழில், வர்த்தக அமைச்சில் சந்தித்தபோதே அமைச்சர் ரிஷாத் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கைக்கான பிரிட்டன் தூதரகத்தின்அரசியல் பிரிவு பொறுப்பாளர் நீல் கவனாஹ் ஒபேயும் பங்கேற்றிருந்தார்.

அமைச்சர் ரிஷாத் இங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

கண்டியில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட வன்முறைகளின் பாதிப்புக்களிலிருந்து அந்த சமூகம் இன்னும் விடுபடாமல் இருக்கின்றது. கடந்த அரசிலும் முஸ்லிம்கள் மீது அட்டூழியங்கள் நடத்தப்பட்டன. அதேபோன்று, இந்த அரசிலும் அவ்வாறான சம்பவங்கள் நிறுத்தப்படவில்லை. கண்டிச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தப் பொலிஸாரோ, பாதுகாப்புப் படையினரோ உரிய வேளையில் ஏற்ற நடவடிக்கை எடுக்கவில்லை.

நாட்டில் வாழும் அனைத்துச் சமூகங்களின் பாதுகாப்பு தொடர்பில், பிரிட்டன் அரசு கவனம்செலுத்தவேண்டும். முஸ்லிகள் மீது நடத்தப்பட்டு வருகின்ற இந்தச் சம்பவங்களைத் தொடர அனுமதிக்க வேண்டாம் என்று இலங்கை அரசுக்கு, பிரிட்டன் எடுத்துரைத்து, இன நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முப்பது வருடங்களுக்கு முன்னர் வெளியேற்றப்பட்ட தென்னிலங்கைப் பிரதேசத்தில் வாழும் வடக்கு மாகாண முஸ்லிம்களில் 30 சதவீதமானோரே, தற்போது மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். எஞ்சியோரை மீள்குடியேற்றுவதற்குப் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் பிரிவினைக்கு ஆதரவளிக்காததனாலேயே, அவர்கள் தமது பிரதேசங்களிலிருந்து விரட்டப்பட்டனர். போர் முடிந்து அமைதி திரும்பிய பின்னர், முஸ்லிம்கள் தாம் வாழ்ந்த பிரதேசங்களில் மீளக்குடியேறச் சென்றபோது, காடுகள் அங்கு வளர்ந்திருந்தால்அதனைத் துப்புரவாக்கும் போதே, முஸ்லிம்கள் காட்டை அழிக்கிறனர் எனவும், வில்பத்துவை நாசம் செய்கின்றனர்எனவும் இனவாதிகள் மிகமோசமாகக் கதை பரப்பினர். அதனைத் தடுக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

தென்னிலங்கையில் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்டு வருகின்ற தாக்குதலுடன் தொடர்புடையவர்களே, வடக்கிலும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டனர். இவர்களுக்குப் பாரிய பின்புலம் உண்டு. அப்பாவிச் சிங்கள மக்கள் மத்தியிலே முஸ்லிம்களைப் பற்றித் தவறான எண்ணங்களை விதைத்து, அவர்களை முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்பட வைப்பதே இதன் நோக்கமாகும். – என்றார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட பிரிட்டன் தூதுவர், தற்கால இலங்கையின் அரசியல் சூழ்நிலைகள் பற்றி அமைச்சரிடம் கேட்டறிந்து கொண்டார். அத்துடன், அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமை தாங்கும் கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அரசியல் செயற்பாடுகள் குறித்தும் அறிந்துகொண்டார்.(ஐ)

## லால்காந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லால்காந்தவின் தாயாரது உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகவே மஹிந்த அங்கு சென்றார் எனவும், இதன்போதே இரகசியப் பேச்சு ஒன்று நடந்தது எனவும் கூறப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதியுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.எம்.சந்திரசேன, எஸ்.சி. முத்துகுமாரன, சேஹான் சேமசிங்க, வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்சித் மற்றும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

முன்னாள் ஜனாதிபதி, அஞ்சலி செலுத்திய பின்னர் லால்காந்தவுடன் அரை மணிநேரம் கலந்துரையாடியுள்ளார். இது குறித்துச் செய்தி சேகரிப்பதற்காக ஊடகவியலாளர்கள் அனுமதி கோரியபோதிலும் அனுமதி வழங்கப்படவில்லை.

உள்ளே இரகசியப் பேச்சு நடத்தப்படுவதாகவும் இடையூறு ஏற்படுத்த வேண்டாம் எனவும் அங்கிருந்த மக்கள் விடுதலை முன்னணியின் பிரதிநிதி ஒருவர் ஊடகவியலாளர்களிடம் கூறியுள்ளார். (ஐ)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

வவுனியா வளாகத்தில் புத்தர் சிலையொன்றை நிறுவுவதற்கு அங்கு கற்கும் சிங்கள மாணவர்கள் முயற்சித்தனர். இதனால் மாணவர்களுக்கும் வளாக நிர்வாகத்திற்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளைத் தொடர்ந்து, வளாகம் காலவரையறையின்றி மூடப்பட்டது. .

மாணவர்களால் கொண்டு வரப்பட்ட ஆலய வடிவிலான சிலைசுமார் 5 இலட்சம் பெறுமதியானதென தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில், அதனைக் கொள்வனவு செய்ய மாணவர்களுக்கு எங்கிருந்து பணம் வந்ததெனக் கேள்வி எழுந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக வளாக முதல்வரிடம் கேள்வியெழுப்பினோம், இந்தச் சம்பவத்தின் பின்னணியில் யாரேனும் இருக்கலாமென்று அவர் சந்தேகம் வெளியிட்டார்.

அத்தோடு, இந்த முரண்பாடு ஏற்பட்ட பின்னர் தங்களது நிர்வாகக் கட்டடத் தொகுதியைச் சூழ்ந்து புலனாய்வாளர்களும் பொலிஸாரும் காணப்படுகின்றன எனவும் வளாக முதல்வர் குறிப்பிட்டார்.

வவுனியா வளாகத்தில் சகல மதங்களையும் பிரதிபலிக்கும் வணக்கஸ்தலங்களை நிறுவுவதற்கான திட்டம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. அரை ஏக்கர் வீதம் அதற்கான காணியும் ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும், அந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னர், தனிப்பட்ட ரீதியில் வளாகத்தில் பௌத்த வணக்கஸ்தலத்தை அமைப்பதற்கு முயற்சித்தமையே முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளது. (ஐ)

## மூன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வவுனியா மேல் நீதிமன்றத்தினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன என சிரேஷ்ட சட்டத்தரணி கே. எஸ்.ரட்ணவேல் தெரிவித்தார்.

இந்த மனுக்கள் தொடர்பான விசாரணைகளில் அளிக்கப்பட்ட சாட்சியங்களில் முரண்பாடுகள் காணப்படுகின்றன எனவும், சாட்சியங்களில் தெரிவித்தபடி, காணாமல் போனவர்கள் என்ன வகையான பஸ்ஸில் ஏற்றிச் செல்லப்பட்டார்கள், என்ன இலக்கமுடைய பஸ்ஸில் ஏற்றிச் செல்லப்பட்டார்கள் என்று சாட்சியத்தில் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை என்றும் முல்லைத்தீவு நீதிமன்றம் தெரிவித்துள்ளதாக வவுனியா மேல் நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற வழக்கு விசாரணையில் தெரிவிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

அளிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் காணாமல் போயுள்ளவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டவர்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டார்களா அல்லது காணாமல் போனார்களா என்பதைத் தீர்மானிப்பது முடியாதுள்ளது என்றும், காணாமல் போனார்கள் என தெரிவிக்கப்பட்டவர்களுக்கு இந்த மனுக்களின் எதிர்த்தரப்பினர் பொறுப்புக் கூறவேண்டியதில்லை என்றும் முல்லைத்தீவு நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளதாகவும் சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் குறிப்பிட்டார்.

இந்த ஆள்கொணர்வு மனுக்கள் வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நடைபெற்ற விசாரணைகளின்போது ஆள்கள் காணாமல் போன சம்பவம் முல்லைத்தீவு நீதிமன்ற நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட பகுதியில் நடைபெற்றிருப்பதால், அந்தச் சம்பவம் குறித்து விசாரணைகள் நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா மேல் நீதிமன்றம் முல்லைத்தீவு நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தது.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனுக்களில் விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளரும், வடமாகாண அமைச்சர் அனந்தி சசிதரனின் கணவருமாகிய எழிலன் சம்பந்தப்பட்ட மனுவும் ஒன்று.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற இந்த மூன்று வழக்குகளின் மனுதாரர்களான விசுவநாதன் பாலநந்தினி, கந்தசாமி பொன்னம்மா, கந்தசாமி காந்தி ஆகியோருடன் வடமாகாண அமைச்சர் அனந்தி சசிதரனும் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர்.

வவுனியா மேல் நீதிமன்றத்தின் அறிவித்தலுக்கு அமைய முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணைகளின் முடிவில் அந்த விசாரணைகளில் கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பான அறிக்கைகள் வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டிருந்தன.

அதனையடுத்து, நேற்று இந்த மூன்று வழக்குகளும் வவுனியாமேல்நீதிமன்றநீதிபதி பாலேந்திரன் சசி மகேந்திரன் முன்னிலையில்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அந்த அறிக்கைகளின் இறுதிப் பகுதியில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் நீதிமன்றத்தில் வாசிக்கப்பட்டன என மனுதாரர் தரப்பில் மன்றில் முன்னிலையாகியிருந்த சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் தெரிவித்தார்.

எனினும் அந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா மேல் நீதிமன்றத்தினால் கோரப்பட்டிருந்ததே தவிர, அந்த விசாரணைகளின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குவதற்கு முல்லைத்தீவு நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லை என சட்டத்தரணி ரட்ணவேல் வவுனியா மேல் நீதிமன்றத்தில் வாதிட்டார்.

அத்துடன் முல்லைத்தீவு நீதிமன்ற அறிக்கைகளின் பிரதி மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டும் என்றும், அவற்றை ஆராய்ந்ததன் பின்னர் அடுத்த கட்டமாக இந்த வழக்குகளை முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் முடிவெடுப்பதற்காகத் தவணையொன்றைத் தர வேண்டும் என்றும் அவர் மன்றில் கோரிக்கை விடுத்தார்.

அவரது கோரிக்கையை ஏற்ற வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசி மகேந்திரன், முல்லைத்தீவு நீதிமன்ற அறிக்கைகளின் பிரதியை மனுதாரருக்கு வழங்குமாறு உத்தரவிட்டமையுடன், இந்த வழக்குகளின் விசா ரணையை எதிர்வரும் மே மாதம் 22 ஆம் திகதிக்கு ஒத்தி வைத் தார். (ஐ)

## விமானசேவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் ஊழல், மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் சாட்சி விசாரணை நடவடிக்கைகள் எதிர்வரும் இரண்டு வாரத்துக்குள் ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன கூறினார்.

மேலும், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரிடமும் தரவுகள் மற்றும் ஆலோசனைகளையும் பெற்று, அரசுக்குத் தேவையான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கு அந்த ஆணைக்குழு விரைவாகப் பணிகளை ஆரம்பிக்கும் என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன் விமானசேவை தொடர்பாகச் சர்வதேச அளவில் இருக்கும் வரவேற்பையும் நன்மதிப்பையும் பாதுகாத் துக் கொண்டு தரமான சேவையைத் தொடர்ந்தும் முன்னெ டுத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி இதன் போது தெளிவுபடுத்தினார். (ஐ)

## கேப்பாபிலவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு படையினர் தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இந்தத் தீ விபத்தினால் 25 ஏக்கர் வரையான தேக்கங்காடு எரிந்துள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்னரும் இங்கு தீ விபத்து ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## படகில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வங்கொடை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டமையையடுத்து, தலா 10,000 ரூபா ரொக்கப் பிணையிலும், 100,000 ரூபா சரீரப் பிணையிலும் விடுதலை செய்யப்பட்டனர். (ஐ)



# ஐ.பி.எல். எதிரணிகளை மிரட்டுகிறார் ரஷீத் கான்

ஆப்கானிஸ்தான் வீரரான ரஷீத் கான், இந்த ஐ.பி.எல். தொடரில் தனது சுழற்பந்து வீச்சினால் எதிரணிகளை மிரட்டி வருகிறார்.

19 வயதாகும் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் ரஷீத் கான். இவர், தற்போது ஐ.பி.எல். தொடரில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிக்காக விளையாடி வருகிறார்.

அதிவேகமாக 100 விக்கெட் எடுத்த வீரர் எனும் சாதனையை படைத்த ரஷீத் கான், சர்வதேச ரி -20 பந்துவீச்சாளர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார். இந்நிலையில், சென்னை மற்றும் பஞ்சாப் அணிகளுக்கு எதிரான போட்டிகளில் ரஷீத் கானின் பந்து வீச்சு எடுபடவில்லை. இதனால், இவரது பந்து வீச்சில் இருந்த மஜிக் போய்விட்டது என அனைவரும் விமர்சிக்கத் தொடங்கினர்.

இதனைத் தொடர்ந்து, நேற்றுமுன்தினம் நடந்த மும்பை அணிக்கு எதிரான போட்டியில், ரஷீத் கான் தான் யார் என்பதைக் காட்டியுள்ளார். குறைந்த இலக்கினை நோக்கிப் பயணித்த மும்பை அணியின் இரண்டு முக்கிய விக்கெட்டுகளை ரஷீத் வீழ்த்தினார்.

மேலும், 4 ஓவர்கள் வீசிய அவர் 11 ஓட்டங்கள் மட்டுமே விட்டு கொடுத்து, 2 விக்கெட்டுடன் ஒரு ஓவரை மெய்டனும் செய்து அசத்தினார்.

இந்தப் போட்டியில் புவனேஷ்வர்குமார், ஸ்டாண்லேக் ஆகியோர் விளையாடவில்லை. ஆனால், குறைவான இலக்கை நோக்கி விளையாடிய மும்பை அணியைச் சமாளித்து பந்து வீசி தனது திறமையை ரஷீத் நிரூபித்துள்ளார்.

கடந்த ஆண்டு, ஐ.சி.சி.யின் மிக முக்கியமான வீரர்களின் பட்டியலில் ரஷீத் கானின் பெயர் இடம்பெற்றிருந்தது. மேலும், ஐ.சி.சி.யின் சிறந்த இணை வீரர் விருதையும் இவர் பெற்றுள்ளார். ரஷீத் கான் தற்போது ஆப்கான் அணிக்குத் தற்காலிக அணித் தலைவராக உள்ளார்.

# புதிய சாதனை நிகழ்த்தி தங்கம் வென்ற டக்சிதா

கொழும்பு சுகததாஸ மைதானத்தில் இடம்பெறும் இளையோருக்கான தேசிய மட்டக் கோலூன்றிப் பாய்தலில் 18 வயதுப் பெண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த நே. டக்சிதா 3.02 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து புதிய சாதனையைப் பதிவு செய்து தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஹெரீனா 2.90 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

கடந்த வருடம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஹெரீனா 3.01 மீற்றர் பாய்ந்து படைத்திருந்த சாதனையையே இவர் முறியடித்தார். (ஐ)




# முக்கிய வீரரான பில்லியை இழந்தது ஹைதரபாத் அணி!

சன்ரைசர்ஸ் ஹைதரபாத் ஐ.பி.எல் அணியின் முக்கிய வீராக உள்ள பில்லி ஸ்டேன்லேக், காயம் காரணமாக ஐ.பி.எல். போட்டியிலிருந்து விலகியுள்ளார்.

ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளரான ஸ்டேன்லேக்கை ரூபா 50 லட்சத்துக்குத் தேர்வு செய்தது ஹைதரபாத் அணி. 23 வயது ஸ்டேன்லேக், இந்த ஐ.பி.எல். போட்டியில் சிறப்பாகப் பந்து வீசி ஹைதரபாத் அணிக்குக் கூடுதல் பலமாக விளங்கினார். இதுவரை 4 ஆட்டங்களில் விளையாடியுள்ள ஸ்டேன்லேக் 5 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

இந்நிலையில் சென்னைக்கு எதிரான ஆட்டத்தில் ஸ்டேன்லேக்கின் வலது கை விரலில் காயம் ஏற்பட்டது. இதையடுத்துச் சிகிச்சைக்காக ஆஸ்திரேலியாவுக்குப் பறந்துள்ளார் ஸ்டேன்லேக். இதனால் அவர் ஐ.பி.எல். போட்டியிலிருந்து விலகியுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புவனேஸ்வர் குமாரும் காயம் காரணமாக சில ஆட்டங்களில் விளையாடாத நிலையில் ஸ்டேன்லேக்கின் விலகல் ஹைதரபாத் அணிக்குப் பின்னடைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் சந்தீப் சர்மா, பசில் தம்பி, நடராஜன், கலீல் அகமது ஆகிய இந்திய வீரர்களின் துணையுடன் இனிவரும் ஆட்டங்களை அந்த அணி எதிர்கொள்ளவுள்ளது. (ஐ)



# ஓய்வு பெறும் திட்டமில்லை



## கூறுகிறார் ஷரபோவா

ரென்னிஸ் உலகின் பிரபல வீராங்கனையான மரியா ஷரபோவா, தற்போதைக்கு ஓய்வு பெறும் திட்டம் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவைச் சேர்ந்த பிரபல டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா. முன்னாள் முதல் நிலை வீராங்கனையான இவர், ஊக்க மருந்துச் சர்ச்சையில் சிக்கினார்.

அதன்பிறகு, 15 மாததடைக்கு பிறகு கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் மீண்டும் களம் இறங்கினார். ஆனால், அவரால் முன்பு போல பெரிய அளவில் வெற்றி பெற முடியவில்லை.

இதனைத் தொடர்ந்து ஷரபோவாவின் ஆட்டம் சிறப்பாக இல்லை, எனவே அவர் ஓய்வு பெறக்கூடும் எனத் தகவல் பரவியது. இந்நிலையில், இதுதொடர்பாக ஷரபோவா கூறுகையில்–

'ஓய்வுக்கு என்று காலக்கெடு எதுவும் நான் நிர்ணயித்துக் கொள்ளவில்லை. ஓய்வு முடிவை எனது விருப்பத்தின் பேரிலேயே எடுப்பேன். அடுத்த ஒலிம்பிக் போட்டியில் விளையாட வேண்டும் என்று விரும்புகிறேன்.

ஆனால், அது நடக்குமா என்பது எனக்குத் தெரியாது. தொடர்ந்து, எனது ஆட்டத்தில் கவனம் செலுத்த விரும்புகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

# 2019 உலகக் கிண்ணம்:

# தென்னாபிரிக்காவை சந்திக்கிறது இந்தியா

2019ஆம் ஆண்டு நடைபெற உள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில், இந்திய தனது முதல் ஆட்டத்தில் தென்னாபிரிக்காவை ஜூன் 5ஆம் திகதி எதிர்கொள்ளவிருக்கிறது.

ஆனால், அந்த ஆண்டு ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரானது மார்ச் 29 முதல் மே 19 வரை நடைபெறும். அதனைத் தொடர்ந்து, மே 30ஆம் திகதி உலகக் கிண்ணப் போட்டி தொடங்கும்.


ஐ.பி.எல் போட்டிக்கும், சர்வதேசப் போட்டிக்கு இடையே 15 நாள்கள் இடைவெளி இருக்க வேண்டும். ஆகையால், இந்தியா மற்றும் தென்னாபிரிக்க அணிகள் மோதும் போட்டி ஜூன் 2ஆம் திகதிக்கு பதிலாக ஜூன் 5ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, ஐ.சி.சி. தலைமை நிர்வாகிகள் கூட்டம் கொல்கத்தாவில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அந்த கூட்டத்தில் கலந்து கொண்ட இந்திய கிரிக்கெட் உயரதிகாரி ஒருவர் கூறுகையில்,

'லோதா குழு பரிந்துரைகள் படி ஐ.பி.எல் போட்டிக்கும், சர்வதேச போட்டிக்கும் இடையே 15 நாட்கள் இடைவெளி இருக்க வேண்டும். அதன் அடிப்படையில், இந்தியா விளையாடும் முதல் ஆட்டம் ஜூன் 5ஆம் திகதி மாற்றப்பட்டது. இது தொடர்பான தகவல் ஐ.சி.சி.க்கும் தெரியப்படுத்தப்பட்டது' என தெரிவித்துள்ளார்.

2019 உலகக் கிண்ணப் போட்டி பிரிட்டனில் மே 30 முதல் ஜூலை 14ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

மேலும் இந்திய அணி பாகிஸ்தான் அணியை மே 16 ஆம் தேதி எதிர்கொள்ளவுள்ளது குறிப்பிடத்தக்கது.



Sunrisers Hyderabad v Kings XI Punjab
இன்று
26.04.2018
இரவு 8.00 மணி















தாவடி தெற்கு, கொக்குவில், ஸ்ரீவடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் பெருமஞ்சத்திருவிழா நேற்று முன்தினம் இரவு மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. இத்திருவிழாவை ஒட்டி கொழும்பு சித்தாரா இசைக்குழுவினரின் இசையில் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியின் பூகழ் பூத்த பாடகர்களான சாய்சரண், ஸ்ரீநிவாஸ் மற்றும் பிரபல தென்னிந்தியப் பின்னணிப் பாடகர்களான ஸ்ரீ மதுமிதா மற்றும் லதாகிருஷ்ணா ஆகியோரின் பாடல் இசை நிகழ்வு வெகு சிறப்பாக நடைபெற்றது. அங்கு இடம்பெற்ற பவித்திரா வசந்தரூபன் அவர்களின் நடன நிகழ்வொன்றினையும், பாடகர் சாய்சரண் அவர்களினால் கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதனையும், கௌரவிக்கப்பட்ட ஈ.எஸ்.பி.நாகரத்தினத்துடன் விழா ஏற்பாட்டாளர்களான விஜிதா அரிசியாலை மற்றும் தேனு களஞ்சிய உரிமையாளர்களையும், இசைநிகழ்ச்சியில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

திருநெல்வேலியில்...
தேனு களஞ்சியத்தின் புதியதோர் உதயம்

Thenu SUPERMART
No.50, Adiyapatham Road, Thirunelvely.


FRESH SERVICE EVERYDAY

இம்மாதம் கொள்வனவு செய்யும் அனைத்துப் பொருள்களுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும். அத்துடன் 2500/= பெறுமதிக்கு மேல் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும். 30.04.2018 அன்று குலுக்கல் இடம்பெற்று பரிசில்கள் வழங்கப்படும்.

1 ஆம் பரிசு - 3 பவுண் தங்க நாணயம்.
2 ஆம் பரிசு - 2 பவுண் தங்க நாணயம்.
3 ஆம் பரிசு - 1 பவுண் தங்க நாணயம்.

ஆறுதல் பரிசாக 50 சிறுவர்களுக்கு சிறப்புப் பரிசு வழங்கப்படும்.

தேனு சுப்பர் மார்ட்
இல.50, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.







இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.04.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.